2020 - இதழ் 11 இலவசம்

கார்திகை - 2020

# உள்ளான மனிதன்

மென்பிரதி

GRACE TABERNACLE
APOSTOLIC CHURCH

gtachurch.ca

# உள்ளான மனிதன்

மாதாந்த சஞ்சிகை - இலவசம் 2020 - இதழ் 11

## இயேசு சொன்னார்:

**வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.**

## கிறேஸ் (ற்)ரபனக்கல்

## வெளியீடு

SCARBOROUGH, ONTARIO, CANADA ☎ 416.613.2909

(f)பின்ச் / மிட்லான்ட் சந்திப்புக்கு அருகில்

நீங்கள் தற்போது கிறிஸ்தவ **ஆவிக்குரிய** ஐக்கியமொன்றிலே இணைந்திருந்தால், அங்கே கருத்தோடு தேவனை சேவித்து, உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்தி, இயேசு கிறிஸ்துவுக்குள், உங்களைக் குறித்ததான பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுங்கள்.

# இந்த இதழில்...

## 2020 - இதழ் 11


**4 விடுதலையைக் கொண்டாடுவோம்**

பிதாவாகிய தேவன் கட்டுண்டவர்களாயுள்ள மனிதர்களை விடுதலையாக்கும்படி தமது குமாரன் இயேசுவை இவ்வுலகிற்கு அனுப்பினார். அவரை விசுவாசிக்கும் ஒவ்வொருவரும் இரட்ச்சிப்பை பெற்று விடுதலை வாழ்வை வாழும்படி வழி உண்டாக்கினார்.

**6 தேவன் குறித்த எல்லை**

வாக்களிக்கப்பட்ட மீட்பராகிய இயேசு கிறிஸ்து பாவங்களுக்காக ஒரே பலியைச் செலுத்தி, வரவிருக்கும் காரியங்களின் நிழலாய் இருந்த பழைய ஏற்பாட்டின் “வழிபாட்டு முறைமைகளை” நிறைவேற்றி முடித்தார்

**12 பிரசங்கக் குறிப்புகள்**

“இப்போதும் உமது அடியானின் வீடு என்றைக்கும் உமக்கு முன்பாக இருக்கும்படி அதை ஆசீர்வதித்தருளும்; கர்த்தரான ஆண்டவராகிய தேவரீர் அதைச் சொன்னீர், உம்முடைய ஆசீர்வாதத்தினாலே உமது அடியானின் வீடு என்றைக்கும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பதாக”

**14 புதிய நாளுக்குள்...**

கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும்அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.


கிரேஸ் (ற்)ரபனக்கல்


**PLACE OF WORSHIP**
210 Silver Star Blvd., Unit #807
Scarborough, ON M1V 5J9, Canada

**MAILING ADDRESS**
7700 Markham Road, P.O. Box 3052
Markham, ON L3S 4T1, Canada

☎ 416.613.2909

info@gtachurch.ca


gtachurch.ca

# புதிய நாளுக்குள்...

அனுதின தியானக் குறிப்புக்கள்

தலைப்பு அகராதி 14ம் பக்கத்திலிருந்து...

**மனக்குழப்பமான, சோர்வான நேரங்களில்**

... கார்த்திகை 1, 3, 4, 8, 10, 13, 14, 20, 21, 23, 24, 28, 30

**போராட்டங்களில், பிசாசின் தந்திரங்களில் வெற்றி**

... கார்த்திகை 2, 3, 4, 7, 8, 9, 10, 13, 14, 16, 20, 23, 24, 28, 30

**பாவத்திலிருந்து விடுதலையடையும் வழி உண்டு**

... கார்த்திகை 7, 9, 11, 16, 18, 19, 24

**முக்கிய தீர்மானங்களை எடுக்கும் முன்**

... கார்த்திகை 2, 4, 6, 7, 9, 11, 13, 14, 15, 16, 17, 19, 21, 24, 29,30

**சமரசமான வாழ்க்கை வேண்டாம்**

... கார்த்திகை 6, 7, 8, 9, 11, 12, 15, 16, 19, 21, 25

**தெய்வீக ஆசீர்வாதங்கள்**

... கார்த்திகை 1, 3, 10, 11, 17, 18, 23, 29, 30

**தேவனுடைய சித்தம் நிறைவேறட்டும்**

... கார்த்திகை 7, 13, 14, 15, 17, 20, 22, 25, 26

**தேவனுக்குப் பிரியமான வாழ்க்கை**

... கார்த்திகை 3, 5, 7, 8, 9, 10, 11, 13, 14, 17, 19, 22, 26, 27, 28, 30

**சமாதானமும் அமரிக்கையுமான வாழ்க்கை உண்டு**

... கார்த்திகை 1, 10, 15, 21, 27, 30

**பொறுமையோடு காத்திருங்கள்**

... கார்த்திகை 1, 2, 15, 20, 21, 22

**தேவ நீதி வெளிப்படும்**

... கார்த்திகை 1, 2, 20, 21, 23

**திவ்விய சுபாவங்கள் வெளிப்படட்டும்**

... கார்த்திகை 3, 5, 7, 10, 11, 17, 23, 26, 28, 29

**வாழ்வு தரும் திருவசனம், ஐக்கியத்தின் மேன்மை**

... கார்த்திகை 4, 11, 13, 14, 18, 20, 21, 24, 25, 26, 27, 30

**மேட்டிமை, வன்மம், பகை தலைதூக்கும் போது...**

... கார்த்திகை 6, 8, 9, 11, 12, 22, 30

gtachurch.ca

# விடுதலையைக் கொண்டாடுவோம்

*போதகர் ரஞ்சிற் கொன்ஸ்ரன்ரைன்*

குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலை யாவீர்கள் என்று இயேசு சொன்னார்.

பிதாவாகிய தேவன் கட்டுண்டவர்களாயுள்ள மனிதர்களை விடுதலையா க்கும்படி தமது குமாரன் இயேசுவை இவ்வுலகிற்கு அனுப்பினார். அவரை விசுவாசிக்கும் ஒவ்வொருவரும் இரட்சிப்பை பெற்று விடுதலை வாழ்வை வாழும்படி வழியை உண்டாக்கினார்.

தேவன் நியமித்த விடுதலையானது ஆசீர்வாதம் நிறைந்தது. இஸ்ரவே லருடைய வாழ்க்கையை கவனிப்போமாகில் அதை இலகுவாக எம்மால் விளங்கிக்கொள்ள முடியும்.

இஸ்ரவேலர் எகிப்திற்கு வந்தபோது அவர்களது தொழில் எகிப்திய ருக்கு அருவருப்பானதாயிருந்தது. பின்பு அநேக வருடங்களாய் அவர்கள் அங்கு அடிமைத்தனத்தில் இருந்தார்கள். செங்கல் சுடும்படி நிர்ப்பந்திக்க ப்பட்டா ர்கள். ஆளொட்டிகளினால் உபத்திரவப்பட்டார்கள். தேவன் அவர்களை விடுவிக்கும்படி மோசேயை பார்வோனிடத்தில் அனுப்பினார். தன் ஜனங்கள் தனக்கு ஆராதனை செய்யும்படி அவர்களை அனுப்பிவிடு என்று பார் வோனுக்கு அறிவித்தார். பார்வோனோ செவிமடுக்க மறுத்தான். அவர்களு க்கு அதிகமாக வேலை கொடுத்து துன்பப்படுத்தினான். இஸ்ரவேல ருக்கு நேரமில்லாதபடி செய்தான். தேவன் அவர்களை விடுவித்தார். அவர்கள் தேவ ஆளுகைக்கு உட்பட்டார்கள்.

| பார்வோனின் ஆளுகையில் | தேவனின் ஆளுகையில் |
|---|---|
| பார்வோன் அவர்களை நேரமில்லா தவர்களாக்கித் துன்பப்படுத்தினான். | தேவன் ஓய்வுநாளைக் கொடுத்து குடும்பமாக ஓய்ந்திருந்து தேவ னை ஆராதிக்க செய்தார். |
| எகிப்தியர்களுக்கு அருவருப்பானவ ர்களாய் காணப்பட்டார்கள். | தேவன் அவர்களை தமது சொந்த ஜனமுமாக்கி அவர்கள் மத்தியில் வாசம்பண்ணினார். |
| கல்வியறிவின்றி வாழ்ந்தார்கள். | தேவனோ தேவ நியமங்களை கற் றுக்கொடுத்து அதை உலகிற்கு அறி விக்கும்படி உயர்த்தினார். |
| செங்கல் சுடுபவர்களாயிருந்தார்கள். | உன்னதமான தேவனின் ஆசாரிய ர்களாக்கினார். அவர்களிலே தமது திட்டத்தை அறிவிக்கும் தீர்க்கதரி சிகளை ஏற்படுத்தினார். |

தேவனின் ஆளுகை உயர்ந்தது. அது சந்தோஷமும் சமாதானமுமுள்ளது. தேவன் அவர்களுக்கு மன்னாவைக் கொடுத்தார். அதில் அவர்களுக்கு ஒரு நியமத்தையும் கொடுத்தார். தங்களது தேவைக்கேற்ப அவர்கள் மன்னாவை சேர்க்கவேண்டும். மேலதிகமாக சேர்த்ததை அகற்றிப்போட வேண்டும். ஆறாம் நாளிலோ அவர்கள் இரண்டத்தனையாய் சேர்த்து ஏழாம் நாளில் ஓய்ந்திருக்கவேண்டும். சிலர் கீழ்படியாமல் அதிகமாக சேர்த்து தங்கள் கூடாரத்தில் வைத்திருந்தார்கள். அது துர்நாற்றமெ டுத்தது.

தேவ ஆளுகைக்குட்பட்டவர்கள் தேவன் சொன்னதை செய்யாமல் அசட்டை பண்ணும்போது அது அவர்கள் கூடாரத்தில் துர்நாற்றம் வீசக்கார ணமாகி விடுகின்றது.

நீ கர்த்தருடைய கையில் அலங்காரமான கிரீடமும், உன் தேவனுடைய கரத்தில் ராஜமுடியுமாயிருப்பாய் என்று தேவனுடைய ஜனத்திற்குக் கூற ப்பட்டுள்ளது.

பரிசுத்த பேதுரு தனது நிருபத்தில் எமக்குண்டான விடுதலையைக்கு றித்துக் கூறும் போது "நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்மு டைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணிய ங்களை ஆறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீ கமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்த மான ஜனமாயும் இருக்கிறீர்கள்." என்று கூறியுள்ளார்.

பிரியமான சகோதரனே சகோதரியே,

தேவன் தந்த விடுதலையை கொண்டாடி வாழ்வோம். நம்முடைய கூடார த்தில் துர்நாற்றம் வேண்டாம். துதியின் சத்தம் கேட்கட்டும். நேரமில்லை என்பது பார்வோனின் ஆளுகை. நாமோ தேவ ஆளுகைக்குட்பட்டவர்களாய் தேவனைத் துதித்து வாழ்வோமாக.

எம்மோடு கூட ஜெபிக்க விரும்பினால் ஞாயிறு காலை 10:00 மணிக்கு நேரலையில் www.gtachurch.ca/live இணையதளத்தின் வழியாக தேவ ஆராதனையில் கலந்து கொள்ளும்படி உங்களை அழைக்கின்றேன்.

## கிருபையின் கூடார அப்போஸ்தல சபை

**ரொரன்ரோ, கனடா ☎ 416.613.2909**

# தேவன் குறித்த எல்லை

மேற்கத்தைய தேசமொன்றிலே, ஆண்டாண்டு காலமாக போதைபொருள் என்று வகைப்படுத்தப்பட்டு, சட்டரீதியாக பாவனைக்கு தடைசெய்யப்பட்டிருந்த குறிப்பிட்ட வலிநிவாரணியான இப் பொருளானது பல சமூக, குடும்ப சீர்குளைவுகளுக்கு பெரும் காரணியாக இருந்து வந்தது. அவற்றினால் இளம் சமுதாயத்திற்கு ஏற்பட்டிருக்கும் பாதிப்புக்கள் குறிப்பிடப்பட்டது. இப்படிப்பட்ட போதைபொருளை உட்கொண்டவர்கள் தங்கள் வாழ்க்கையை கெடுத்துக் கொண்டது மட்டுமல்லாமல், தங்களைச் சூழ உள்ளவர்களின் வாழ்வில் பல நோவுகளை ஏற்படுத்தியிருக்கின்றார்கள். குறிப்பாக சில இடங்களிலே உயிரிழப்புக்களுக்கும் இந்த போதைப் பொருளானது உந்தும் காரணியாக இருந்ததை செய்திகள் வாயிலாக கேள்விப்படுகின்றோம். இதனால் சட்டரீதியாக குற்றவாளிகள் என்று தீர்ப்பு பெற்று பலர் சிறைக்கு சென்றிருக்கின்றார்கள். இந்த நிலையிலே, அந்த தேசமானது, குறிப்பிடப்பட்ட அந்த போதை பொருளுக்கு இருந்த அரச தடையை அகற்றி, சட்டரீதியாக அந்த போதைப் பொருளைவிற்பனை செய்வதற்கு தேச மட்டத்திலே பல முகவர்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றாரகள். இந்தச் செயலை நியாயப்படுத்த பல காரணங்களை பலர் கூறிக்கொள்கின்றார்கள். ஆனால், தற்போது, குற்ற உணர்வு இல்லாமல் தங்கள் ஆசைகளை நிறைவேற்றும் வழியை ஏற்படுத்தியிருக்கின்றார்கள். ஒரு தேசம் குறிப்பிட்ட காரியத்தை சட்டமாக்கலாம், அதன்படிக்கு நாங்கள் அந்த சட்டத்தின் கீழ் குற்ற உணர்வின்றி எங்கள் இச்சைகளை நிறைவேற்றலாம் ஆனால் எங்கள் பாவ செயல்களை தேவன் முன்னிலையிலே யார் நியாயப்படுத்த முடியும்?

இவ்வண்ணமாகவே, இன்று தேச, சமூக மட்டத்திலே தேவனாகிய கர்த்தர் குறித்த எல்லையை அகற்றி, அவர் செய்யாதே என்று விலக்கினவற்றை, செய்யலாம் என்றும், அதை செய்பவர்களுக்கு எதிராக பேசும் மனிதர்களுக்கு கடும் தண்டனை வழங்கப்படும் என்றும் நாடுகளிலே சட்டங்கள் அமுலாக்கப்பட்டு வருகின்றது. இந்தச் செயலுக்கு, தேவனாகிய கர்த்தரை அறியாதவர்கள் மட்டுமல்ல, அவருடைய அழைப்பைப் பெற்று, அவரை அறிந்திருந்தும், தங்கள் மனதை கடினப்படுத்தி குற்ற உணர்வின்றி பாவம் செய்யும்படிக்கு அவர்களும் இந்த சட்டங்களுக்கு ஆதரவாளர்களாக மாறிவிடுகின்றார்கள். திருமணம் அவசியமற்றது, தேவன் நியமித்த திருமண ஒழுங்கை மாற்றுதல், மரித்த மனிதர்கள் வழியாக ஜெபம் செய்தல், தேவன் நியமித்த திருமுழுக்கை மாற்றுதல், சுரூபங்களையும் விக்கிரகங்களையும் வைத்து ஆராதனை செய்தல், உபவாசம் அவசியமற்றது என கூறுதல், தசமபாகம் தேவையில்லை என சபைகளிலே குழப்பங்களை ஏற்படுத்துதல், ஆவியின் வரங்கள் முடிவுற்றது என கூறுதல், இப்படியாக தேவன் நியமித்த ஒழுங்குகளை மாற்றிவிட்டால் நான் அதற்கு உடன்பட்டவனும் அல்ல, நான் அவைகளை இனி செய்ய வேண்டிய அவசியமல்ல. இது என் நாட்டின் சட்டம், இது என் கலாச்சாரம், அது எங்கள் குடும்ப பாரம்பரியம் என்று கூறி மனிதர்கள் தங்கள் செயல்களை நியாயப்படுத்தி, சுய திருப்தி அடைகின்றா ர்கள். தேவனுடைய நியமங்கள் மனிதர்களுடைய சமாதானமான வாழ்விற்காக கொடுக்க ப்பட்டவைகள். அவைகளை தன் வாழ்வில் கைகொள்ளாதவன் தேவனுடைய சமாதானத்தை இழந்து போய்விடுவான். அது மட்டுமல்ல, நாங்கள் யாவ

ரும் ஒரு நாள் தேவனுடைய நியாயசாசனத்திற்கு முன்பாக நிற்க வேண்டும். ஒவ்வொருவரும் அவருக்கு கணக்கு ஒப்புவிக்க வேண்டிய நாள் உண்டு. எவரும் தப்பிக் கொள்ள முடியாது.

தேவனாகிய கர்த்தர், மனிதனை சிருஷ்டித்த நாளிலிருந்து, மனிதகுலம் பல முக்கியமான மைல் கற்களை (milestone) கடந்து வந்திருக்கின்றோம். சிருஷ்டிப்பு, பாவம், மீட்பரை குறித்த வாக்குத்தத்தம், காயீன் ஆபேலின் காணிக் கை, ஏனோக்கு எடுத்தக் கொள்ளப்படுதல், நோவாவின் நாட்கள், முற்பிதா க்களாகிய ஆபிரகாம், ஈசாக், யாக்கோபின் நாட்கள், எகிப்தின் அடிமைத்தனமும் விடுதலையும், ஆராதனை முறைமைகள், நியாயாதிபதிகள், ராஜாக்களும் தீர்க்கதரிசிகளும், சிறையிருப்பு, வாக்களிக்கப்பட்ட மீட்பராகிய இயேசுவின் பிறப்பு, வாழ்க்கை, சிலுவை மரணம், உயிர்தெழுதல், பரமேறுதல், பரிசுத்த ஆவியின் வருகை போன்ற நிகழ்வுகள் முக்கியமானவைகள்.

நோக்கத்தின் அடிப்படையில் இவற்றை சுருக்கமாக பார்ப்போம்.

- தேவ சாயலாக மனிதன் சிருஷ்டிக்கப்படுதல்,
- மனிதன் கீழ்படியாமையினாலே பாவம் செய்து தேவ சாயலை இழந்து நித்திய மரணத்திற்குள்ளாகுதல்,
- நித்திய மரணத்திலிருந்து மனித குலத்தை விடுதலையடையச் செய்பவராகிய மீட்பரை குறித்த வாக்குத்ததம்,
- மீட்பர் வெளிப்படும்வரைக்குமுள்ள பலி செலுத்துதலும் வழிபாட்டு முறைமைகளும்,
- வாக்களிக்கபட்ட மீட்பரின் முதலாம்வருகையும்புதிய உடன்படிக்கையும்
- பரிசுத்த ஆவியானவரின் வருகையும், அவர் வழியாக இயேசு கிறிஸ்துவுக்குள் பிதாவாகிய தேவனின் திருச்சித்தத்தை எங்கள் வாழ்க்கையில் நிறைவேற்றுதல்.

பாவத்தில் விழுந்து, தேவ சாயலை இழந்து போன மனிதன், நித்திய ஆக்கினைக்குள்ளாகாதபடிக்கு, ஒரு மீட்பரை அனுப்புவதாக வாக்களித்தார். அந்நாளிலிருந்து, பிதாவாகிய தேவன்தாமே, முற்பிதாக்கள் வழியாகவும், நியாயாதிபதிகள் தீர்க்கதரிசிகள், ராஜாக்கள் வழியாக தம்முடைய அநாதி தீர்மானத்தை குறித்து, பங்கு பங்காகவும், வகை வகையாகவும் திருவுளம்பற்றினார்.

பலிகளும் ஆராதனை முறைமைகளும் நியமங்களாக கொடுக்கப்படும் முன்னதாகவே, ஆபேல் தேவனுக்குகந்த பலிகளை செலுத்தினான். ஏனோக்கு, தேவனுடைய சமுகத்திலே அவரோடு சஞ்சரித்து வந்தான். நோவா, தேவனுக்கு பிரியமானவைகளை செய்து வந்தான். ஆபிராகாம், ஈசாக், யாக்கோபு தேவனுக்கு பலி செலுத்தினார்கள். ஆபிரகாமோடு செய்த உடன்படிக்கயின்படி ஆண்கள் யாவரும் தங்கள் நுனித்தோலை அகற்றுவதன் மூலம் விருத்தசேதனம் செய்து கொண்டார்கள்.

எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்த தம்மால் தெரிந்து கொள்ளப்பட்ட ஜனங்களாகிய இஸ்ரவேலர், பல நூற்றாண்டுகளாக, எகிப்தின் அருவருப்புக்களை நோக்கியிருந்தார்கள். அன்றைய உலகிலே பராக்கிரமமுள்ள ராஜாவாகிய பார்வோனின் கையிலிருந்து தம்முடைய ஜனங்களாகி

ய இஸ்ரவேலரை, விடுதலையாக்கும் இராத்திரியிலே “பஸ்கா” என்னும் பண்டிகையை ஏற்படுத்தினார். அன்றிரவிலே, பாழாக்கும் சங்காரம் எகிப்திலே உண்டானது, அதிலிருந்து தப்பித்துக் கொள்ளும்படிக்கு பழுதற்ற ஆட்டுக்குட்டியானது அடித்து, அதின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, தாங்கள் அதைப் புசிக்கும் வீட்டுவாசல் நிலைக்கால்கள் இரண்டிலும் நிலையின் மேற்சட்டத்திலும் தெளித்து, அன்று ராத்திரியிலே அதின் மாம் சத்தை நெருப்பினால் சுட்டு, புளிப்பில்லா அப்பத்தோடும் கசப்பான கீரையோடும் அதைப் புசிக்க வேண்டும். அதைப் புசிக்கவேண்டிய வித மாவது, நீங்கள் உங்கள் அரைகளில் கச்சை கட்டிக்கொண்டும், உங் கள் கால்களில் பாதரட்சை தொடுத்துக்கொண்டும், உங்கள் கையில் தடி பிடித்துக்கொண்டும் அதைத் தீவிரமாய் புசிக்கக்கடவீர்கள் அது கர்த்த ரு டைய “பஸ்கா”. நீங்கள் இருக்கும் வீடுகளில் அந்த இரத்தம் உங்களுக் காக அடையாளமாய் இருக்கும் அந்த இரத்தத்தை நான் கண்டு, உங்களைக் கடந்துபோவேன் நான் எகிப்துதேசத்தை அழிக்கும்போது, அழிக்கும் வாதை உங்களுக்குள்ளே வராதிருக்கும். அந்த நாள் உங்க ளுக்கு நினைவுகூருதலான நாளாய் இருக்கக்கடவது. அதைக் கர்த்தரு க்குப் பண்டிகையாக ஆசரிப்பீர்களாக. அதை உங்கள் தலைமுறை தோறும் நித்திய நியமமாக ஆசரிக்கக்கடவீர்கள் என்ற நியமத்தை இஸ்ரவேல் ஜனங்கள் பெற்றுக் கொண்டார்கள். (யாத்திராகமம் 12:1-14)

எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்ற தேவ ஜனங்கள், சீனாய் வனாந்திரதிலே, பாவ நிவாரணத்திற்குரிய பலிகளையும், பண் டிகை வழிபாட்டு முறைமைகளையும் தேவனிடத்திலிருந்து பெற்றுக் கொண்டார்கள். அவர்களுக்கு கொடுக்கப்பட்ட வழிபாட்டு முறைமைகளி ன்படி பாவநிவர்த்திக்காக சர்வாங்க தகனபலிகளும், பாவநிவாரணப லிகளும் கொடுக்கப்பட்டு வந்தது. அந்நாட்களிலே அவர்கள் மிருக ஜீவ ன்களையும், பறவைகளையும், தானியங்களையும் பலியாகவும், காணிக் கையாவும் கொடுத்து வந்தார்கள். வாரத்தின் ஏழாம் நாளை (சனிக்கி ழமை) ஓய்வு நாளாக ஏற்படுத்தியிருந்தார்.

தேவனால் நியமிக்கப்பட்ட “பாஸ்கா” பண்டிகையும், பலி செலுத்துதலும், வழிபாட்டு முறைமைகளும் நாங்கள் மேற்கூறிய சுருக்கத்தின்படி எந்த குறிப்பில் அடங்கும்? இவை வாக்களிக்கப்பட்ட மீட்பர் வெளிப்படும் வரைக்குமுள்ள பலி செலுத்துதலிலும் வழிபாட்டு முறைமைகளிலும் அடங்கும். அந்த வழிபாட்டு முறையானது, இனி வரவிருக்கும் நன்மைக ளின் நிழலாக இருந்து வந்தது. பிதாவாகிய தேவனின் அநாதி தீர்மான த்தின்படி, மனிதகுலத்தின் பாவத்தை போக்கும் பழுதற்ற “பஸ்கா” ஆட்டு க்குட்டியாக இயேசு கிறிஸ்து தம்மைத் தாமே ஒரேதரம் சிலுவையிலே பலியாக ஒப்புக் கொடுத்தார். குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மனிதகுலத்திற்கு மீட்பு உண்டாயிற்று. இதுவே வரவிருந்ததும், தேவ தாசர்கள் எதிர் பார்த்திருந்த துமான ஞான நன்மையாகும்.

கர்த்தராகிய இயேசுவை இன்னும் ஏற்றுக் கொள்ளாத இஸ்ரவேல் ஜனங்கள், இன்றும் பழைய உடன்படிக்கையை பின்பற்றி வருகின்றார்கள். தாங்கள் மாத்திரமே தேவனுடைய ஜனங்கள் என்றும், இஸ்ரவேலர் அல்லாதவர்கள் யாவரும், இஸ்ரவேலின் காணி ஆட்சிக்கு புறம்பான புறஜாதிகள் என்றும் கூறிக் கொள்கின்றார்கள். ஆண்கள் விருத்தசேதனம் செய்து கொள்கின்றார்கள். “பஸ்கா” பண்டிகையை ஆசரிக்கின்றார்கள்.

ஏழாம் நாளை (சனிக்கிழமையை) ஓய்வுநாளாக அனுசரித்து வருகின்ற ார்கள். இவ்வழி பாட்டுக்களுக்கு அமைய, நியமிக் கப்பட்ட ஆசாரியர் களைத் தவிர வேறு யாரும், ஆலயத்தின் பரிசுத்த ஸ்தலத்திற்கோ அல் லது மகா பரிசுத்த ஸ்தலத்திற்கோ செல்ல முடியாது, எங்கள் பாவ நிவிர் த்திக்கான பலியை நாங்கள் செலுத்த முடியாது.

நுனித் தோலை விருத்தசேதனம் செய்யாமல் உங்கள் இருதயத்தின் நுனி த்தோலை நீக்கிப்போடுங்கள் (எரேமியா 4:4). பலிகளின் திரள் எனக்கு என்னத்துக்கு என்று கர்த்தர் சொல்லுகிறார். பலியை நீர் விரும்புகிறதி ல்லை, விரும்பினால் செலுத்துவேன் தகனபலியும் உமக்குப் பிரியமான தல்ல. தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான் தேவனே, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர். (ஏசாயா 1:11, சங்கீதம் 51:16-17). நாம் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்ப தற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய்ப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணியிருக்கின்றார் (எபிரெயர் 10:19). கிறிஸ்து இயேசு வழியாக நாங்கள் அவருடைய துதியை சொல் லிவரும் ஆசாரியர்களாகவும் ராஜாக்களாகவும் ஏற்படுத்தப்பட்டிருக்கின் றோம்.

வாக்களிக்கப்பட்ட மீட்பராகிய இயேசு கிறிஸ்து மனித குலத்தின் பாவங் களுக்காக ஒரே பலியைச் செலுத்தி, வரவிருக்கும் காரியங்களின் நிழ லாய் இருந்த பழைய ஏற்பாட்டின் “வழிபாட்டு முறைமைகளை” நிறை வேற்றி முடித்தார்.

நன்றாக கவனியுங்கள்! தேவானாகிய கர்த்தர் விளம்பிய அவருடைய வார்த்தைகள் மாறிப் போவதில்லை. பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டு ள்ள முன்னோர்களின் சாட்சிகள் அழிந்து போவதில்லை. அவை எங்க ளுக்கு திருஷ்டாந்தங்களாக வைக்கப்பட்டிருக்கின்றது. தேவனுடைய கற்ப னைகள் மாறிப் போகவில்லை. தேவனுடைய அநாதி திட்டம் ஒருபோதும் மாறிப் போவதில்லை. ஆனால், பழைய ஏற்பாட்டிலே குறிப்பிடப்பட்டிருந் தும், இனி வருங்காரியங்களின் நிழலாக இருந்து வந்ததுமான பலி செலு த்துதலும் அதைச் சார்ந்த வழிபாட்டு முறைமைகளையும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நிறைவேற்றி முடித்தார். நித்திய மரணத்தை வென்று, பாதாளத்தை ஜெயித்து, வாரத்தின் முதலாம் நாள் (ஞாயிற்றுக் கிழமை) அவரை பிதாவாகிய தேவன் தாமே உயிர்தெழச் செய்தார். அந்த முதலாம் நாள் கர்த்தருடைய நாளாக அனுசரிக்கப்பட்டு வருகின்றது. மீட் பராகிய இயேசு கிறிஸ்து தாமே, தம்மை பஸ்கா ஆட்டுக் குட்டியாக சிலுவையிலே பலியாக ஒப்புக் கொடுத்த அன்று இராத்திரியிலே, அவர் கள் போஜனம்பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடு த்து, ஆசீர்வ தித்து, அதைப் பிட்டு, சீஷர்களுக்குக் கொடுத்து: நீங்கள் வாங்கிப் புசியு ங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். பின்பு, பாத்திரத்தை யும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து: நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள் இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது. என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். இதை நாங்கள் கர்த்தருடைய பந்தி என்று ஆசரித்து வருகின்றோம். (மத்தேயு 26:26-29 லூக்கா 22:19 ).

வாக்களிக்கப்பட்ட பரிசுத்த ஆவியானவரும் பெந்தேகோஸ்து நாளன்று, அதாவது கர்த்தர் உயிர்தெழுந்த நாளிலிருந்து ஐம்பதாவது நாள், வாரத்தின் முதலாம் நாள் (ஞாயிற்றுக் கிழமை) பிரதியட்சமாய் இறங்கி வந்ததும் குறிப்பிடத்தக்கது. (அப் 2:1-4)

இன்றைய உலகிலே, தேவனாகிய கர்த்தர் ஏற்படுத்திய மெய்விவாகமானது பெரும்பான்மையானோரின் மன விருப்பப்படி காலத்திற்கு காலம் மாற்றியமைக்கப்படுகின்றது. (ரோமர் 1:21-32). ஒருவர் விசுவாசித்து மனந்திரும்பி ஞானஸ்நானம் எடுக்கும் அறிவை அடையமுன்பு, அல்லது அந்த நிலையை அடைய முன்பு, தங்கள் இஷ்டப்படி ஞானஸ்நானம் கொடுக்கின்றார்கள். (மாற்கு 16:16) இதனால் கர்த்தருடைய பந்தியையும் அற்பமாக எண்ணுகின்றார்கள். (1 கொரி 11:27-31). பிதாவாகிய தேவனுக்கும் எங்களுக்கும் மத்தியஸ்தராகிய இயேசுவை நோக்காமல், மரித்தவர்களை வணங்கி, நாங்கள் பவுலை சார்ந்தவர்கள், அப்பலோவை சார்ந்தவர்கள், பேதுருவை சார்ந்தவர்கள் என்று தேவனால் தேவ ஜனங்கள் தங்களை வகைப்படுத்துவதை ஊக்குவிக்கின்றார்கள். (1 தீமோ 2:5-6, 1 பேது 2:16, 1 கொரி 3:5-9). சிலை, சுரூப, உருவ வழிபாடுகளில் ஈடுபடுவோரை கண்டித்துணர்த்தாமல் பாராமுகமாக விட்டுவிடுகின்றார்கள். இயேசுவின் நாமத்தில் பிதாவாகிய தேவன்தாமே கொடுத்த சகல சத்தியத்திலும் எங்களை நடத்தும் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தையும் அவரால் உண்டாகும் வரங்களையும் அற்பாக எண்ணுகின்றார்கள். (1 கொரி 12:1-31, யோவான் 16:13)

ஆதி அப்போஸ்தலர்கள், முக்கியமான தீர்மானங்களை எடுக்கு முன்பதாக உபவாசித்து ஜெபித்தார்கள். உபவாசத்திற்கும் ஜெபத்திற்கும் தடையிராதபடிக்கு புருஷனும் மனைவியும் சிலகாலம் பிரிந்திருக்க வேண்டுமென்று சம்மதித்தாலன்றி, ஒருவரைவிட்டு ஒருவர் பிரியாதிருங்கள் என்று உபவாச முறைமையை குறித்து ஊழியராகிய பவுல் அறிவுரை கூறி யிருக்கின்றார். ஆனால், இன்று சிலர் தங்களுக்கு உபவாசித்து ஜெபிக்க மனதில்லாதிருப்பதால் உபவாச நாட்கள் அவசியமில்லை என்று தேவ ஜனங்களை தவறான வழியிலே நடத்துகின்றார்கள். (அப் 13:3, அப் 14:23, அப் 8:15-17, 1 கொரி 7:4-5)

கர்த்தராகிய இயேசு பரிசேயரை கண்டித்து பேசுகையில், நீங்கள் ஒற்தலாமிலும் வெந்தயத்திலும் சீரகத்திலும் தசமபாகம் செலுத்தி, நியாயப்பிரமாணத்தில் கற்பித்திருக்கிற விசேஷித்தவைகளாகிய நீதியையும் இரக்கத்தையும் விசுவாசத்தையும் விட்டுவிட்டீர்கள் இவைகளையும் செய்ய வேண்டும், அவைகளையும் விடாதிருக்கவேண்டும். அதாவது, நியாயப்பிரமாணமானது, பிரதானமாக, நியாயப்பிரமாணமானது, தேவ நீதியையும் இரக்கத்தையும் விசுவாசத்தையும் பற்றியது. எனவே அவை களையும் செய்து கொண்டு, தசமபாகத்தையும் விட்டுவிடாதிருங்கள் என்று கூறினார். (மத்தேயு 23:23) ஆனால் இன்று, தங்களை ஒழுங்கு படுத்தி, தங்கள் பொருளாதாரத்தில் தேவனுக்கு உண்மையாக இருக்க மனதில்லாதவர்கள், “எல்லாமே கர்த்தருடையது” என்று போதித்து, நீங்கள் தசமபாகம் முறைப்படி செலுத்த வேண்டியதில்லை, உங்கள் விருப்பப்படி, தான தர்மங்களையும் செய்து, உங்கள் இஷ்டப்படி செயற்திட்டங்களை செய்து, உங்களுக்கு பிடித்த ஊழியர்களுக்கு கொடுங்கள் என்று சபைகளிலே பெருங் குழப்பங்களை உண்டு பண்ணுகின்றார்கள். யாரோ

கொடுத்த தசம பாகத்தினால் தாங்கப்பட்டு, எங்கள் நாடுகளுக்கு அனுப்பப்பட்ட மினஷரிகள் வழியாக இயேசுவை நாங்கள் அறிந்து கொண்டோம் என்பதை மறந்து போனவர்களாக, தசமபாகம் காணிக்கைளையும் குறித்து அற்பமாக எண்ணுகின்றார்கள்.

வேத வாக்கியங்களுக்கு எதிரான மதக் கொள்கைகளை ஏற்படுத்துவதால், குற்ற உணர்வின்றி மேற்கூறியவைகளை் தாங்கள் இச்சித்தபடி செய்து வருகின்றார்கள். பரிசுத்த வேதாகமத்தின்படி தங்கள் வழிகளை கண்டித்து பேசுபவர்களை தண்டிக்கும்படிக்கு மத ஒன்றியங்களையும், அரசாங்க சட்டங்களையும் அமுல்படுத்தி வருகின் றார்கள்.

அதுபோலவே, கர்த்தருடைய நாளைக் குறித்து அசட்டை செய்து, எல்லா நாளுமே கர்த்தருடையது என்று கூறி, ஞாயிற்று கிழமைகளில் தாங்கள் விரும்பிய அலுவல்களை குற்ற உணர்வின்றி அந்நாளிலே நிறை வேற்றும்படி பல நியாயங்களை கூறிக் கொள்கின்றார்கள். வேறு நாட்களை தங்கள் ஓய்வுநாளாக மாற்றிக் கொள்கின்றார்கள். தங்களுக்கு பிடித்த ஊழியர்களை தங்களுக்கென தெரிந்து கொண்டு, தங்கள் வாழ்க்கை முறைக்கு ஏற்ற நேரத்தில், மனதிற்கினிய பிரசங்கங்களை இணையத்தளத்தில் தெரிந்து கொள்கின்றார்கள். விளையாட்டு கழகங்களையும், உணவுச்சாலைகளின் கிளைகளை வாங்கும் உரிமையாளர்கள் போல (franchiser), சில சபைகளையும் தாங்கள் வாங்கிக் கொள்கின்றார்கள். இவர்கள், தேவன் கொடுத்த சுயாதீனத்தைத் துர்க்குணத்திற்கு மூடலாகக் கொண்டிருக்கின்றார்கள்.

பிரியமானவர்களே, கர்த்தருடைய நாளை கனப்படுத்துங்கள் அதாவது, எங்கள் வாழ்க்கையிலே தினமும் நாம் செய்யும் எல்லா அலுவல்களிலும் தேவனுடைய கற்பனைகளை பின்பற்றி வாழ வேண்டும். ஞாயிற்று கிழமையன்று, சகல கனத்தோடும் பரிசுத்தமாய் தேவ சமுகத்திற்கு செல்ல வேண்டும். ஆலயத்திற்கு சென்று பயபக்தியோடு, ஒருமனதோடு ஆராதனையில் கலந்து கொள்ள வேண்டும். ஆராதனைக்கு செல்லும் நேரத்தோடு அந்த நாள் முடிவடைந்து போவதில்லை. கர்த்தருக்கென்று நியமிக்கப்பட்ட நாளிலே நாங்கள் இன்னும் அதிகமாக தேவ நியமங்களின்படி எங்கள் வாழ்க்கையை அவருடைய வார்த்தையின் வெளிச்சத்தில் ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஆதி அப்போஸ்தலர்களின் நாட்களிலும், அவர்கள் வாரத்தின் முதல்நாளிலே, அப்பம்பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்தார்கள். (அப் 20:7)

தேவனுடைய அநாதி தீர்மானத்தின்படி இனி வரவிருக்கும் பிரதானமான மைல் கல்லை அதாவது கர்த்தருடைய இரண்டாம் வருகையையும் நியாத்தீர்ப்பையும் எதிர்நோக்கி வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அந்த நாள் கர்த்தருடைய பெரிதும் பிரகாசமுமான நாள், அந்த நாளிலே நாங்கள் வெட்கப்பட்டு போகாதபடிக்கு, இந்த நாட்களிலே தேவன் நியமித்த எல்லைகளை எங்கள் மனம் விரும்புவது போல மாற்றாமல், பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை மனதார நிறைவேற்றுவோம்.

**இருதயத்தை ஆராய்ந்தறிகின்ற தேவன், உங்களை வழிநடத்திச் செல்வாராக! ஆமேன்!**

# தேவரீர் என் வீட்டை கட்டுவீராக

**பிரசங்கக் குறிப்புக்கள்** - போதகர் ரஞ்சிற் கொன்ஸ்ரன்ரைன்

**பிரதான வாசகம் - ஏரேமியா 32:32**

நாங்கள் எங்கள் வாழ்க்கையிலே நன்மையான காரியங்களை செய்து வருகின்றோம். அப்படி செய்து வருகின்ற வேளையிலே, நாங்கள் செய் யும் நன்மையான கிரியைகளுக்கு எதிராக போர் செய்கின்ற தீய சக்திகள் உண்டு. மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. இந்த தீய ஆவிகள், மனிதர்கள் வழியாக தங்கள் பொல்லாத கிரியை களை நடப்பித்து வருகின்றது.

வயது முதிர்ந்த ஆபிரகாம் என்ற மனிதனுக்கு பிள்ளைகள் இல்லாதிருந்த போது, தேவனாகிய கர்த்தர் அவனை அழைத்து, நான் உன் சந்ததியை பூமியின் புழுதியைப் போல பெருகப் பண்ணுவேன் என்று வாக்குரைத்தார். ஆண்டுகள் கடந்து சென்றபோது, அவனுடைய மனைவியாகிய சாராய், அந்நாட்களிலிருந்த வழக்கப்படி, தன் வேலைக்காரியாகிய ஆகார் என்னும் ஸ்திரி வழியாக, ஆபிரகாமிற்கு சந்ததி உருவாகட்டும் என்று எண்ணி, அவளை ஆபிரகாமிற்கு கொடுத்தாள். ஆகார் வழியாக ஆபிர காமிற்கு இஸ்மவேல் என்னுமொரு மகன் பிறந்தான். ஆனால், தேவா னாகிய கர்த்தர் ஆபிரகாமை நோக்கி, அடிமைப் பெண்ணாகிய ஆகார் வழியாக பிறந்த பிள்ளை அல்ல, நான் உன் மனைவியாகிய சாராள் வழியாக பிறக்கும் பிள்ளை வழியாக உன் சந்ததியை உருவாக் குவேன் என்றார். சாராள் கர்ப்பம் தரிக்க முடியாத வயது சென்று ஸ்திரியாக இருந்த போதிலும், அவள் வழியாக தேவன் தான் கொடுத்த வாக்கை நிறைவேற்றி, ஈசாக் என்னும் குமாரனை கொடுத்தார். அந்நாட்களிலே, சாராளின் திட்டப்படி பிறந்த, அடிமைத்தனத்தின் பிள்ளையாகிய இஸ்ம வேல், தேவனுடைய வாக்குத்தத்தத்தின் படி பிறந்த பிள்ளையாகிய ஈசா க்கை பரியாசம் செய்து வந்தான். அதுபோலவே, இந்நாட்களிலும், தேவ ஆவியால் நடத்தப்படுகின்ற தேவனுடைய வாக்குத்தத்தத்திற்கு உட்பட் டவர்களை, இந்த உலகத்தின் அடிமைத்தனத்திற்கு உட்பட்டவர்கள் பரிகா சம் செய்து துன்பப்படுத்துகின்றார்கள்.

இஸ்மவேல் என்பவன் ஈசாக்கைவிட வயதில் மூத்தவனாக இருந்தான். அவன் ஈசாக்கை பரியாசம் பண்ணினதினால், தேவன் ஈசாக்கை குறித்து உரைத்த ஆசீர்வாதத்தின் வாக்குத்தத்தத்தில் ஏதாவது ஒரு சிறிய காரி யம் கூட நிறைவேறமாற் போயிற்றோ? இல்லை, சகல ஆசீர்வாதங்களும் நிறைவேறிற்று. இன்றும் நாங்கள் ஈசாக்கு வாக்குத்தத்தத்தின் சுதந்திர வாளி என்று அறிக்கையிடுகின்றோம்.

பிதாவாகிய தேவனுடைய வாக்குத்ததத்த்தின்படி மேசியா வெளிப்படும்ப டிக்கு இஸ்ரவேல் ஜனங்கள் எதிர்பார்த்திருந்தார்கள். மெசியாவாகிய இயேசு தம்முடைய திருப்பணியை ஆரம்பித்தபோது நன்மை செய்கி ன்றவராய் சுற்றித்திரிந்தார். குருடர் பார்வையடைந்தார்கள், சப்பாணிகள்

நடந்தார்கள், குஷ்டரோகிகள் சுத்தமாகினார்கள், செவிடர் கேட்டார்கள், மரித்தோர் எழுந்திருந்தார்கள், தரித்திரருக்குச் சுவிசேஷம் பிரசங்கிக் கப்பட்டது, அசுத்த ஆவிகளிலிருந்து விடுதலை உண்டாயிற்று, கடலும் காற்றும் அவருடைய சொல்லிற்கு அடங்கியது, அப்பங்கள் பலுகிப் பெருகிற்று இப்படியாக எண்ணுக்கடங்காத அற்புதங்களையும் அதிசயங் களையும் செய்தார். ஆனால், மெசியாவை எதிர்பார்த்திருந்த இஸ்ரவேல் சந்ததியார் அவரை ஏற்றுக் கொள்ள மதில்லாதவர்களாக இருந் தார்கள். இயே சுவை துன்பப்படுத்தி, பரியாசம் பண்ணினார்கள். மெசி யாவானவர் வெளிப்படும்படி அவர்கள் தேவனுடைய வாக்குத்தத்தத்தை விசுவாசித்து காத்திருந்தார்கள் ஆனால் அந்த வாக்குத்தத்தத்தை தேவன் நிறைவே ற்றிய போது, அது தங்கள் எண்ணப்படி நிறைவேற்றப் படாத தால் இன் றும் தேவ சித்தத்திற்கு விரோதமாக எழுந்து நிற்கின்றார்கள்.

கருப்பொருளாவது, இவ்வண்ணமாக ஆவிக்கு விரோதமாக மாம்சமும், மாம்சத்திற்கு விரோதமாக ஆவியும் போராடுகின்றது. இவ்வண்ணமாக, வேதத்திலே காணப்படும் பரிசுத்தவான்கள் யாவரும் பரியாசத்திற்குள்ளா னார்கள். எனவே, பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெ ல்லாம் அவித்துப்போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாச மென்னும் கேடகத்தைப் பிடித்துக்கொண்டவர்களாயும் நில்லுங்கள் என்று பரிசுத்த வேதாகமம் அறிவுரை கூறுகின்றது.

இன்றும் தாங்கள் தேவனைச் சார்ந்தவர்கள் என்று கூறும் மனிதர்கள், தலையாகிய கிறிஸ்துவை சார்ந்து வாழாமல், அக்காலத்திலே இயேசுவுக்கு எதிர்த்து நின்ற சதுசேயர், பரிசேயர், வேதபாரகரைப் போல தங்கள் மனவிருப்பம் நிறைவேறும்படி செயற்பட்டு வருகின்றார்கள். இன்று எங்கள் வாழ்க்கையிலே, தேவனுடைய வாக்குத்தத்தம் நிறைவேற காத்திருக்கின்ற நாங்கள், தேவனுடைய சித்தப்படி அவை நிறைவேற வேண்டும் என்ற எண்ணமுள்ளவர்களாக வாழ வேண்டும்.

தாவீது ராஜா, தேவன் தன்னை எவ்வளவாய் உயர்த்தினார் என்று உண ர்ந்தவனாய், தான் தேவனுக்கு ஒரு ஆலயம் கட்ட வேண்டும் என்று ஆசையாய் இருந்தான். தன்னுடைய இஷ்டப்படி அதை செய்யாமல், தேவனுடைய தீர்க்கதரிசியிடம் அதைக் குறித்து கேட்டான். அதற்கு கர்த்தர்: நீ அல்ல, உன்னுடைய குமாரனே அந்த ஆலயத்தைக் கட்டுவ ான் என்று கூறினார். அந்த வார்த்தைக்கு அவன் தன்னை தாழ்த்தி தேவ திட்டத்தின்படியே ஆலயம் கட்டப்பட இடங் கொடுத்தான்.

“இப்போதும் உமது அடியானின் வீடு என்றைக்கும் உமக்கு முன்பாக இருக்கும்படி அதை ஆசீர்வதித்தருளும் கர்த்தரான ஆண்டவராகிய தேவரீர் அதைச் சொன்னீர், உம்முடைய ஆசீர்வாதத்தினாலே உமது அடியானின் வீடு என்றைக்கும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பதாக” என்று தாவீது ராஜா கூறியது போல, நாங்களும் எங்கள் வீடு தேவனால், அவருடைய சித்தப்படி கட்டப்படத்தக்கதாக நாங்கள் எங்கள் வாழ்க்கையை தேவனிடத்தில் முற்று முழுவதுமாக ஒப்புக் கொடுப்போமாக.

[இந்த தேவ செய்தியின் முழுமையான ஒலிப்பதிவை பின்வரும்
இணையத் தளத்தில் (**INTERNET WEBSITE** இல்)
தமிழ் ஆங்கில மொழிகளில் கேட்கலாம்.]

செவ்வாய் | கார்திகை 1

📖 மாலை வாசகம் – 2 பேது 3:13 – 14

# நிரந்தர வாசஸ்தலம்

"உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக. தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு. அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன் ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்." என்று எங்கள் மீட்பராகிய இயேசு கிறிஸ்து வாக்குரைத்திருக்கின்றார். இந்த உலகிலே வாழும்வரை எங்களுக்கு தேவைகள் உண்டு. வாழ்வில் நாளாந்தம் பல சவால்களை நாம் எதிர்நோக்குகின்றோம். அவைகளை மேற்கொள்ளும்படிக்கு தேவ ஆவியானவர் தாமே எங்களுக்கு உதவி செய்கின்றார். ஆனால் நாங்கள் அவைகளுக்காக மட்டும், அதாவது, இம்மைக்காகமாத்திரம் நாம் கிறிஸ்துவின் மேல் நம்பிக்கையுள்ளவர்களாய் இருக்கக்கூடாது. எங்களுடைய அழைப்பு இந்த உலகத்திற்குரியதல்ல. இந்த உலகம் நாங்கள் நிரந்திரமாக தங்கும் வாசஸ்தலம் அல்லவே. மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளையே நோக்கியிருக்கின்றோம். காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள். அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரத்திற்கென்று அழைக்கப்பட்டோம். கடைசிக்காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவாக **விசுவாசத்தைக் கொண்டு** தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற எங்களுக்கு அந்தச் சுதந்தரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. *(1 பேதுரு 1:4-5)*. அந்த அழியாத ஸ்தலத்தை நோக்கி சென்று கொண்டிருக்கும் நாம், இந்த அழைப்பின் மேன்மையை உணர்ந்தவர்களாக, தேவன்மேல் கொண்டுள்ள விசுவாசத்தை தளரவிடாமல் காத்துக் கொள்ள வேண்டும். உங்களை அழுத்தும் பாரங்களை நோக்கிப் பார்க்காமல், விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி பாருங்கள். அவருடைய வாக்குத்தத்தமானது உண்மையுள்ளது. பிரியமானவர்களே, இவைகள் வரக்காத்திருக்கிற நீங்கள் கறையற்றவர்களும் பிழையில்லாதவர்களுமாய் சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படு ம்படி ஜாக்கிர தையாயிருங்கள்.

**2 பேதுரு 3:12**

**தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு மிகுந்த ஆவலோடே காத்திருங்கள்.**

**ஜெபம்**: வாக்குமாறாத தேவனே, அழியாத நித்தியமான வாசஸ்தலத்தை எங்களுக்காக ஆயத்தம் பண்ணியிருக்கின்றீர். அந்த நாளை நோக்கி பொறுமையோடே ஓடக் கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவ நீதி வெளிப்படும் நாள்

ஒரு ஊரிலே வசித்து வந்த இரண்டு குடிமக்களுக்கிடையிலே பெரும் வழக்கொன்று ஏற்பட்டுவிட்டது. ஒரு மனிதனானவன் தன் அயலவனுக்கு அநியாயம் செய்துவிட்டு, அதை மூடி மறைப்பதற்காகவும், தன் குற்றத்தை அயலவன் மேலே போட்டு விடுவதற்காகவும், அநேக யுக்திகளை கையாண்டான். அதனால், அந்த ஊரிலுள்ள சிலர், அந்த அயலவனை காரணமின்றி நிந்தித்தார்கள். சிலர் அவனை பகைத்தார்கள். அவன் பலர் முன்னிலையிலே அவமானம் அடைந்தான். தன் வழக்கிற்காக பல பல இன்னல்களோடு சுமார் ஆறுமாதங்களாக பொறுமையோடு காத்திருந்த அந்த அயலவனுக்கு, வழக்கின் நாளானது வந்தது. குறித்த ஊரை அரசாண்ட ராஜா தன் சிங்காசனத்திலே அமர்ந்தான். வழக்கு விசாரிக்கப்பட்டபோது, அந்த அயலவன் நிரபராதி என்றும், அவன் மேல் வீண்பழி சுமத்தப்பட்டது என்றும் அறிந்து கொண்ட ராஜா, கடும் கோபமடைந்து. குற்றமிழைத்த அந்த மனிதனானவனை தண்டித்து, கடும் காவலிலே போடுவித்தான். அந்த அயலவனோ விடுதலை பெற்று சமாதானத்துடன் வீடு திரும்பினான். சொற்ப காலம் அநியாயத்தை அனுபவித்த அந்த அயலவன் ராஜாவின் முன்னிலையிலே சமாதானம் அடைந்தான். தன் அநியாயத்திலே களிகூர்ந்திருந்தவன் ராஜாவின் முன்னிலையிலே பெரும் அவமானத்தை அடைந்தான். பிரியமானவர்களே, இந்த நாட்களிலே, தேவனுக்கு பிரியமாக அவருடைய வழியிலே வாழ்பவர்கள், பல துன்பங்களை எதிர்நோக்குகின்றார்கள். நீதி நியாயம் எங்கே என்று வாடுகின்றார்கள். வேறு சிலர் நிந்தைகளையும் அடிகளையும் கட்டுகளை யும் காவலையும் அநுபவிக்கின்றார்கள். அநியாயங்களை சகித்து நீதியைக் காணாமல் கர்த்தருக்குள் நித்திரையடைந்திருக்கின்றார்கள். ஆனால் ராஜாதி ராஜாவாகிய இயேசு நியாயத்தீர்ப்பு செய்யும்படி சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கும் நாளொன்று உண்டு. அவருக்கு மறைவான காரியம் ஒன்றுமில்லை. பூமியின் தூளிலே நித்திரைபண்ணுகிறவர்களாகிய அநேகரில் சிலர் நித்தியஜீவனுக்கும், சிலர் நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் விழித்து எழுந்திருப்பார்கள். இந்த பூமியிலே ஆண்டுகள் முடிந்து போனாலும், தேவனுடைய ஆளுகைக்கோ முடிவில்லை. தேவாதி தேவனை விசுவாசித்து அவருக்காக காத்திருக்கின்றவர்கள் ஒரு போதும் வெட்கப்பட்டுப் போவதில்லை.

**ரோமர் 10:11**

அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லையென்று வேதம் சொல்லுகிறது.

**ஜெபம்**: நித்திய ஜீவனுக்கென்று என்னை அழைத்தவரே, நெருக்கடியான நேரத்திலும், என்னிடத்திலிருக்கும் உம்முடைய சுபாவங்களை வெளிக் காட்டும்படிக்காய் எனக்கு உணர்வுள்ள இருதயத்தைத் தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# என்றென்றுமுள்ள சுதந்திரம்

துன்மார்க்கன் நீதிமானுக்கு விரோதமாய்த் தீங்கு நினைத்து, அவன் பேரில் பற்கடிக்கிறான். ஆண்டவர் துன்மார்க்கனைப்பார்த்து நகைக்கிறார். துன்மார்க்கனின் நாள் வருகிறதென்று காண்கிறார். சிறுமையும் எளிமையுமானவனை மடிவிக்கவும், செம்மையாய் நடக்கின்ற உத்தம மார்க்கத்தாரை விழப்பண்ணவும், துன்மார்க்கர் பட்டயத்தை உருவி, தங்கள் வில்லை நாணே ற்றுகிறார்கள். ஆனாலும் அவர்கள் பட்டயம் அவர்களுடைய இருதயத்திற்குள் உருவிப்போம் அவர்கள் வில்லுகள் முறியும். அநேக துன்மார்க்கருக்குள்ள செல்வத்திரட்சியைப்பார்க்கிலும், நீதிமானுக்குள்ள கொஞ்சமே நல்லது. துன்மார்க்கருடைய புயங்கள் முறியும் நீதிமான் களையோ கர்த்தர் தாங்குகிறார் என்று சங்கீதப் புத்தகத்திலே வாசிக்கின்றோம். பிரியமானவர்களே, இந்த பூமியிலே வாழும் நாட்களிலே, பிதா வாகிய தேவனுடைய சித்தத்தை நாங்கள் நிறைவேற்றி முடிப்பதே எங்கள் நோக்கமாக இருக்க வேண்டும். அந்த நோக்கத்தை குலைத்துப்போடு வதற்காக, எங்களுக்கு எதிராக பல சக்திகள் செயற்பட்டு வருகின்றது. எங்கள் சிந்தையை தேவனுடைய உன்னதமான நோக்கத்திலிருந்து மாற்றிவிட வேண்டும் என்பதே அந்த தீய சக்திகளின் நோக்கம் எனவே மிகவும் விழிப்புள்ளவர்களாக இருங்கள் என்று பரிசுத்த வேதாகமம் எங்களுக்கு அறிவுரை கூறுகின்றது. பொல்லாதவர்களைக்குறித்து எரிச்சலடையாதே. நியாயக்கேடுசெய்கிறவர்கள்மேல் பொறாமை கொள்ளாதே. அவர்கள் புல்லைப்போல் சீக்கிரமாய் அறுப்புண்டு, பசும் பூண்டைப்போல் வாடிப்போவார்கள். கர்த்தரை நம்பி நன்மைசெய் தேசத்தில் குடியிருந்து சத்தியத்தை மேய்ந்துகொள். கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு. அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள்செய்வார். உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு. அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார். உன் நீதியை வெளிச்சத்தைப் போலவும், உன் நியாயத்தைப் பட்டப்பகலைப்போலவும் விள ங்கப்பண்ணுவார் (சங்கீதம் 37). உலகத்திலே நடக்கும் அநீதியின் செயல்களை கண்டு, அவைகளை மாம்சத்திலே மேற்கொள்ள முயலாதிருங்கள். உங்கள் உத்தமத்தைவிட்டு விலகாமல் கர்த்தருக்குக் காத்தி ருந்து, அவருடைய வழியைக் கைக்கொள்ளுங்கள். அழியாத நித்திய சுதந்திரத்தை தேவன் உங்களுக்கு தந்தருள்வார்.

**சங்கீதம் 37:18**

**உத்தமர்களின் நாட்களைக் கர்த்தர் அறிந்திருக்கிறார் அவர்கள் சுதந்தரம் என்றென்றைக்கும் இருக்கும்.**

**ஜெபம்**: சர்வ வல்லமையுள்ள தேவனே, துன்மார்க்கரின் வழிகளை கண்டு என் தூய வாழ்வை நான் கெடுத்துக் கொள்ளாதபடிக்கு உம்முடைய நேரத்திற்காக காத்திருக்கும் பொறுமையைத் தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பிரகாசமுள்ள மனக்கண்கள்

இயேசு இந்த உலகத்திலே வாழ்ந்த நாட்களிலே, வேத பிரமாண ங்களை முறைப்படி கற்றுத் தேர்ந்தவர்களே அந்நாட்களில், யூதர்கள் மத்தியிலே இருந்த ஆலோசனை சங்கத்திலே அங்கத்தவர்களாக இருந்தார்கள். இவர்கள் இயேசுவின் சீஷர்களைப் பார்த்து, அவர்கள் கல்லாதவர்கள் என்று கூறிக் கொண்டார்கள். ஆனால் வேத பிரமாண ங்களை முறைப்படி கற்று பாண்டித்தியம் பெற்றுக் கொண்ட ஆலோசனைச் சங்கத்திலே இருந்த பெரியவர்களுடைய மனக் கண்கள், அவர்கள் எதிர்பார்த்திருந்த மெசியாவாகிய இயேசுவை அறிந்து கொள்ள முடியாமல் இருளடைந்திருந்தது. அவர்கள் உள்ளத்திலே பெருமையும் அகங்காரமும் குடிகொண்டிருந்தது. பரிசுத்தராகிய இயேசுவின்மேல் குற்றம் சாட்டும்படிக்கு, ஆலோசனைச் சங்கத்திலிருந்த “பிரதான ஆசாரியரும் மூப்பரும் சங்கத்தார் யாவரும் இயேசுவைக் கொலைசெய்யும்படி அவருக்கு விரோதமாய்ப் பொய்ச்சாட்சி தேடினார்கள். ஒருவரும் அகப்படவில்லை. அநேகர் வந்து பொய்ச்சாட்சி சொல்லியும் அவர்கள் சாட்சி ஒவ்வவில்லை.” (மத்தேயு 26:59-60) கற்று அறிந்து பாண்டித்தியம் பெற்றும் மெய்யான தேவனை அறிந்து கொள்ளாமல் இருப்பதைவிட, கற்றறியாமலிருந்தாலும் மெய்யான தேவனாகிய கர்த்தரை அறிந்து கொள்வதே மேலான பாக்கியம். தேவனை அறியமுடியாதிருக்கும் அறிவினால் இலாபம் என்ன? ஒன்றுமில்லை. இயேசுவின் சீஷனாகிய பிலிப்பு நாத்தான்வேலைக் கண்டு: நியாயப்பிரமாணத்திலே மோசேயும் தீர்க்கதரிசிகளும் எழுதியிருக்கிறவரைக் (அதாவது மெசியாவை) கண்டோம் அவர் யோசேப்பின் குமாரனும் நாசரேத்தூரானுமாகிய இயேசுவே என்றான். இப்படியாக இயேசுவின் சீஷர்களும் நீர் தேவனுடைய குமாரன் என்று இயேசுவை நோக்கி கூறினார்கள். இவர்கள் இயேசுவை ஏற்றுக் கொள்ளும் இருதயம் உடையவர்களாக இருந்தார்கள். பிரியமானவர்களே, உங்களை சூழ இருக்கும் கற்றவர்களை குறித்து தியானிப்பது இன்றைய தியானத்தின் நோக்கமல்ல. மாறாக இயேசுவின் அழைப்பை ஏற்றுக் கொண்ட சீஷர்களைப் போல, தாழ்மையுள்ள இருதயம் உடையவர்களாகவும், எப்போதும் இயேசுவின் வார்த் தைகளை ஏற்றுக் கொள்ளும் பிள்ளைகளாகவும் நாங்கள் வாழ வேண்டும்.

**யோவான் 6:69**

நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நாங்கள் விசுவாசித்தும் அறிந்தும் இருக்கிறோம் என்றான்.

**ஜெபம்:** பரிசுத்தமுள்ள தேவனே, பலவிதமான போதனைகளால் இழுப்புண்டு, உன்னதராகிய இயேசுவையும் அவருடைய வார்த்தைகளையும் மறந்து போய்விடாதபடிக்கு பிரகாசமுள்ள மனக் கண்களை தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

வியாழன் | கார்த்திகை 5 📖 மாலை வாசகம் – சங்கீதம் 51:17

# தகப்பனுக்கு பிரியமான பிள்ளை

தெருவுக்கு அப்புறமாக இருக்கும் காட்டுப் பகுதிக்கு செல்லக் கூடாது என்று ஒரு தகப்பனானவர் தன் மூன்று இளம் குமாரர்களுக்கும் மிகவும் தெளிவாக கூறியிருந்தார். அங்கு செல்வதால் வரக்கூடிய ஆபத்துக்களை குறித்து அவ்வப்போது தன் பிள்ளைகளுக்கு ஞாபகப்படுத்தி வந்தார். ஒரு நாள் அயலிலே வசித்து வந்த வாலிபர்களில் ஒரு சிலர் அந்தக் காட்டுப் பகுதிக்குச் செல்ல தீர்மானித்திருந்தார்கள். அங்கு சென்று வருவது ஒரு வீரதீரச் செயல், ஆபத்துக்களை கண்டு நாங்கள் பயப்படுகின்றவர்கள் அல்லர் என்று அந்த மூன்று இளம் குமாரர்களுக்கும் கூறி, அவர்கள் அற்ப காரியங்களுக்கு பயந்தவர்கள் என்று கேலி செய்தார்கள். அதனால், அந்த குமாரர்களில் மூத்தவன் அவர்களோடு கூடிச் செல்வதற்கு முடிவெடுத்தான், அவனை தொடர்ந்து அவனுடைய தம்பிமாரும் அவர்களோடு சேர்ந்து கொண்டார்கள். அன்றைய நாளிலே அந்த காட்டுப் பகுதிக்குள் வந்த சில வனவிலங்குகள் அங்கு சென்ற யாவரையும் கடித்து காயப்படுத்தின. அவர்களின் அவலக் குரலைக் கேட்ட பெரியவர்கள் அங்கு சென்று உயிர்ச் சேதமில்லாமல் அவர்களை காப்பாற்றினார்கள். தகப்பனானவர் தன் மூன்று குமாரர்களையும் நோக்கி: நான் உங்களை அங்கு செல்ல வேண்டாம் என்று பல முறை கூறியிருக்கின்றேன். ஏன் இப்படி செய்தீர்கள் என்று கேட்டார். மூன்றாவது குமாரன், தன் அண்ணன்மார் சென்றார்கள் ஆகவே நானும் சென்றேன் என்றான். மூத்தவன்: அயலில் வசிக்கும் நண்பர்கள் கேலி செய்தார்கள் அதனால் நான் சென்றேன் என்றான். இரண்டாவது குமாரன்: அப்பா, உங்களுடைய சொல்லைக் கேளாமல் குற்றம் செய்தேன். இனி இப்படியான காரியத்தை செய்யமாட்டேன். என்னை மன்னித்துவிடுங்கள் என்று மனம்வருந்தினான். இந்த சம்பவத்தை சற்று சிந்தித்துப் பாருங்கள், இவர்கள் மூவரில், எந்தக் குமாரனில் தப்பனானவர் பிரியமாக இருப்பார்? தங்கள் குற்றங்களுக்கு சாட்டுப் போக்குகளை சொல்லும் மூத்தவனிடமும் இளையவனிடமுமா? அல்லது தன்னுடைய குற்றத்தை உணர்ந்து மனந்திரும்பிய இரண்டாவது குமாரனிடமா? நிச்சயமாக மனந்திரும்புதலுக்குரிய கனியை கொடுக்கும் தன் இரண்டாவது குமாரனின் கிரியையில் பிரியமாயிருப்பார். அது மட்டுமல்ல, தன்னுடைய மற்றய குமாரர்களும், இரண்டாவது குமாரனுக்குரிய இருதயத்திற்கொத்தவர்களாக மாற வேண்டும் என்பதையே அவர் விரும்புவார்.

**மத்தேயு 3:8**

**மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள்.**

**ஜெபம்**: இரக்கங்களின் பிதாவே, நான் தவறுகின்ற நேரங்களிலே, சாட்டு போக்குகளை சொல்லாதபடிக்கு, என் நிலையை உள்ளபடி உம்மிடம் கூறி மனந்திரும்பும் இருதயத்தை எனக்குத் தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# இரக்கங்களின் பிதா

எங்கள் ஆதி பெற்றோராகிய ஆதாம் ஏவாளின் சம்பவத்தைக் குறித்து நாங்கள் யாவரும் அறிந்திருக்கின்றோம். தேவனுடைய சத்தத்திற்கு கீழ் படிவதைப் பார்க்கிலும், வலுசர்ப்பமாகிய சாத்தானுடைய சத்தத்திற்கு கீழ்ப்படிந்து, தேவனானவர் செய்யக் கூடாது என்று கூறிய காரியத்தை செய்தார்கள். அந்த வேளையிலே தேவனானவர் அவர்களோடு பேசினார்: அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமைக் கூப்பிட்டு: நீ எங்கே இருக்கிறாய் என்றார். அதற்கு அவன்: நான் தேவரீருடைய சத்தத்தைத் தோட்டத்திலே கேட்டு, நான் நிர்வாணியாயிருப்பதினால் பயந்து, ஒளித்துக்கொண்டேன் என்றான். அப்பொழுது அவர்: நீ நிர்வாணி என்று உனக்கு அறிவித்தவன் யார்? புசிக்கவேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விரு ட்சத்தின் கனியைப் புசித்தாயோ என்றார். அதற்கு ஆதாம்: என்னுடனே இருக்கும்படி தேவரீர் தந்த ஸ்திரீயானவள் அவ்விருட்சத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள், நான் புசித்தேன் என்றான். அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஸ்திரீயை நோக்கி: நீ இப்படிச் செய்தது என்ன என்றார். ஸ்திரீயானவள்: சர்ப்பம் என்னை வஞ்சித்தது, நான் புசித்தேன் என்றாள். அதாவது மனிதர்கள் அன்றும் இன்றும் தங்களுடைய செயற்பாடுகளை நியாயப்படுத்துவதற்கு முந்திக் கொள்கின்றார்கள். பிதாவாகிய தேவன் எங்கள் இருதயங்களை ஆராய்ந்து அறிகின்றவர் என்றும், அவருக்கு மறைவானது ஒன்றுமில்லை என்பதை நன்றாக அறிந்திருந்தும். தற்போது அகப்பட்டிருக்கும் பிரச்சனையான சூழ்நிலையி லிருந்து எப்படியாவது தப்பிக் கொண்டால் போதும் என எண்ணுகின்றார்கள். இதனால் மனிதர்கள் முன்னிலையிலே தங்கள் கிரியைகள் சரி, அல்லது அது பிழைத்தால் அது என்னுடைய பிழையல்ல, மற்றவனாலே உண்டானது என நியாயப்படுத்த முயற்சிக்கின்றார்கள். அப்படியாக சில வேளைகளிலே சில பிரச்சனைகளிலிருந்து தற்காலிகமாக தப்பித்துக் கொள்கின்றார்கள். பிரியமானவர்களே, நாங்கள் யாவரும் தேவனுக்கு முன்பாக நிற்க வேண்டிய நாள் ஒன்று உண்டு. தேவனுடைய நீடிய பொறுமையை அசட்டை செய்யாமல், கொடுக்கப் பட்டிருக்கும் கிருபையின் நாட்க ளிலே, தேவனிடத்திலே சேருவோம். எங்களுடைய தேவன் இரக்கமுள்ளவர் எனவே தயங்காமல் அவர் முன்னிலையில் உங்களை தாழ்த்துங்கள்.

**புலம்பல் 3:22**

**நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே, அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை.**

**ஜெபம்:** கிருபை நிறைந்த தேவனே, உம்மிடத்திலே விடுதலை உண்டு என்பதின் கருப்பொருளை உணர்ந்தவனா(ளா)க, உம் சமுகத்திலே உண்மையை பேசும் உள்ளத்தைத் தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

| சனி \| கார்த்திகை 7 | 📖 மாலை வாசகம் – கலாத்தியர் 5:16 – 25 |
|---|---|

# ஜீவனுள்ள தேவனுடைய ஆலயம்

மேற்கத்தைய நாடு ஒன்றிலே, ஒரு மனிதன் தன் பிழைப்பிற்காக செல்லப்பிராணிகளை விற்கும் வியாபாரத்தை செய்து வந்தான். அதற்காக இரண்டு மாடியுள்ள ஒரு இடத்தை வாடகைக்கு எடுத்து, அதன் கீழ் தட்டிலே செல்லப்பிராணிகளை கூடுகளிலே அடைத்து வைத்திருந்தான். மேல் தட்டிலே, அவன் வசித்து வந்தான். இந் நாட்களிலும் பல வகையான வன விலங்குகள், ஊர்வன போன்றவற்றை அநேக இடங்களிலே செல்லப் பிராணிகளாக வளர்த்து வருகின்றார்கள். இந்த வியாபாரியும், மலைப்பாம்பு ஒன்றை தன் கடையிலே விற்பனைக்காக வைத்திருந்தான். ஒரு காலையிலே, மேல் மாடியிலே தங்கியிருந்த இரண்டு சிறு பிள்ளைகள் அவர்கள் படுக்கையிலே மரித்து போயிருந்தார்கள். அந்த வியாபாரி, தன் கடைக்குள் இருந்த மலைப்பாம்பு அதன் கூட்டிற்குள் இல்லாதிருந்ததைக் கண்டு கொண்டான். கடந்த இரவு அந்த பாம்பு தன் கூட்டிலிருந்து தப்பிச் சென்று அந்த இரண்டு சிறுவர்களையும் கொன்று போட்டது என்பதை பொலிசார் உறுதி செய்து கொண்டார்கள். ஆம். கேட்பதற்கு மிக துக்க மானதும் கொடூரமானதுமான உண் மைச் சம்பவம். இன்று அவர்களை குறித்து கவலையடையாமல், எங்கள் இருதயத்தை நாங்கள் ஆராய்ந்து பார்க்க வேண்டும். மலைப் பாம்பு இருக்க வேண்டிய அதன் இடம் உண்டு. அந்த இடம் மனிதர்கள் வாழும் இல்லங்கள் அல்ல. அது போலவே, மாம்சத்திற்குரிய கிரியைகளாகிய பொருளாசை, மோகபாவம், களியாட்டங்கள் போன்றவை தங்குமிடம் எங்கள் இருதயம் அல்ல. அவைகளை நாங்கள் கட்டுப்படுத்தி, இருதயத்திற்குள்ளே அடக்கி வைத்திருக்கலாம். ஆனால், கூட்டை விட்டு செல்ல சந்தர்ப்பத்தை பார்த்திருந்த அந்த மலைப் பாம்பைப் போல, இருதயத்தில் இருக்கும் மாம்ச கிரியைகள் அதன் கிரியைகளை நடப்பிக்கும்படி அதை கொண்டிருப்பவர்களின் வாழ்விலே வெளிப்படுத்தும். அந்த நாளிலே அவர்களுடைய வாழ்க்கையிலே அவை பெரும் பாதகத்தை உண்டு பண்ணும். எங்கள் இருதயம் தேவன் தங்கும் ஆலயம். அந்த ஆலயத்தில் பொருளாசை, மோக பாவம், களியாட்டங்களுக்கு இடம் கொடுக்காதிருங்கள். இருளின் அந்தகார கிரியைகளை இருதயத்தில் மறைத்து வைக்காதிருங்கள். ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனை தேவன் கெடுப்பார் தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது. நீங்களே அந்த ஆலயம்.

**2 கொரிந்தியர் 6:16**

**நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே.**

**ஜெபம்:** பரிசுத்தமுள்ள தேவனே, நான் பரிசுத்த வாழ்வு வாழும்படிக்கு என்னை வேறுபிரித்தீர். உம்முடைய ஆவியை எனக்கு தந்தீர். மாம்ச கிரியைகளுக்கு இடம் கொடுக்காமல் வாழ கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பெலவீனங்களை மேற்கொள்ளுங்கள்

தன் வாலிபநாட்களிலே திடகாத்திரமாக இருந்த மனிதன் மாதத்தில் ஒரு சில தடவைகள் புகைப்பிடிக்கும் பழக்கமுடையவனாயிருந்தான். குறிப் பிட்ட அவனுடைய நண்பர்களில் சிலர் புகைப்பிடிக்கும் பழக்கமுள்ளவர் களாக இருந்ததால், அவர்களை சந்திக்கும் போது, அவர்கள் மத்தி யிலே அவர்களை போல இருக்கும்படிக்கு அதை செய்து வந்தான். அது அவனுக்கு ஒரு பிரச்சனையாக தோன்றவில்லை. நான் எப்போதா வது ஒரு தரம் புகைப்பிடிப்பவன் (ca sual smoker) என்பதை பெருமையாக சொல்லிக் கொள்வான். காலங்கள் கடந்து சென்று, அவன் திருமணமாகி பிள்ளைகளுடன் இருக்கும் நாட்களி லே, அவனுடைய வேலையிலே எதிர் பாராத பல சவால்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. அத்துடன் அவன் வீட்டில் நடந்த ஒரு சம்பவமும் அவனுக்கு அதிக மன அழுத்தத்தை கொடுத்தது. அதனால் அவன் சரீரத்திலே பெலவீனமேற்பட்டது. தரித்தி ருந்து நிதானமாக சிந்திக்க முடியாமல் அவன் மனம் குழம்பியிருந்தது. இதனால், அவனிடமிருந்து தவறான புகைப்பிடிக்கும் பழக்கம் பெலன டைய ஆரம்பித்தது. மாதத்திற்கு சில தடவை புகைத்தவன், இப்போது நாளாந்தம் பல தடவைகள் புகை பிடிக்க ஆரம்பித்தான். தன்னுடைய புகைப்பிடிக்கும் பழக்கத்திற்கு தன் வேலையாலும், குடும்பத்தாலும் ஏற் பட்ட அழுத்தமே காரணம் என்று சொல்லிக் கொண்டான். வேலையி லும் வீட்டிலும் ஏற்பட்ட அழுத்தமல்ல, அவன் தன் பெலனுள்ள நாட் களிலே தன் வாழ்வில் பாராமுகமாக விட்டுவைத்த பெலவீனமே கார ணம். இப்போது அவன் சூழ்நிலைகளால் நெருக்கப்படும் போது, சிறி தாக இருந்த பெலவீனம் அவன் வாழ்க்கையை மேற்கொண்டுவிட்டது. தாவீது என்னும் பக்தன், இஸ்ரவேலை ஆளும் ராஜாவாக இருந்த போதிலும், வாழ்வில் ஏற்படும் விக்கினங்கள் கடந்து செல்லும் மட்டும் உன்னதமானவருடைய மறைவிலே அடைக்கலம் புகுந்து கொண்டான். இது அவருக்கு ஏதேட்சையாக ஏற்பட்ட பழக்கம் அல்ல, தன் வாலிப நாட்களிலிருந்து, தாவீது, எல்லா சூழ்நிலைகளிலும் தேவனை அண்டி வாழ்கின்றவராக இருந்து வந்தார். பிரியமானவர்களே, நீங்கள் விட்டு வைத்திருக்கும் தவறான பழக்கங்கள் உங்கள் வாழ்க்கையை மேற்கொ ள்ளும் முன்பதாக, நீங்கள் அவைகளை மேற்கொண்டு விட்டுவிடுங்கள்.

**கலாத்தியர் 5:24**

**கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்.**

**ஜெபம்**: முடிவில்லா வாழ்விற்கு என்னை அழைத்த தேவனே, நீர் தந்த மீட்பிற்கு நன்றி. என்னால் செய்ய முடியாத நற்கிரியையை செய்து முடிக்க எனக்கு பெலன் தந்து வழிநடத்துவீராக.இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# உங்கள் வழிகளை ஆராய்ந்து பாருங்கள்

வருடத்தின் மூன்றாம் காலாண்டு முடிந்த நிலையிலே, தனது ஸ்தாப னத்தின் முன்னேற்றத்தை மறுசீராய்வு செய்வதற்காக, ஸ்தாபனத்தின் உரிமையாளர், தான் நியமித்த ஸ்தாபன நிர்வாகிகளோடு கூட்டம் கூடினார். தேசிய பொருளாதாரம் ஆட்டம் கண்டிருக்கும் வேளையிலும், இந்த ஆண்டிற்கான ஸ்தாபனத்தின் குறிக்கோளை அடைய வேண்டும் என்ற நோக்கத்துடன், அதை அடை வதற்குரிய வழிகளை தீவிரமாக ஆரா ய்ந்து பார்த்தார்கள். இப்படியாக ஒவ் வொரு காலாண்டும் முடியும் போது செய்து வந்தார்கள். ஆண்டு இறுதி யிலே, தாங்கள் தோல்வியடைந்த இட ங்களிலே கற்ற பாடங்களையும், புதிய ஆண்டிலே எவ்விதமாக பின்னடைவு களை தவிர்த்துக் கொள்ளலாம் என்றும் ஆராய்ந்து வந்தார்கள். பிரி யமான சகோதர சதோதரிகளே, அந்த ஸ்தாபனத்தின் உரிமையாளரின் விடா முயற்சியை சற்று சிந்தித்துப் பாருங்கள். இந்த உலகத்தோடு அழிந்து போகும் பொருளாதாரத்தில் முன்னேற்றம் காண்பதற்காக தன்னுடைய வியாபரத்தின் நிலையை முன் குறித்த நாட்களில் ஆராய்ந்து பார்த்தார். அழியாத ராஜ்யத்தின் உடன் சுதந்திரர்களாக அழைப்பை பெற்ற நாம் எவ்வளவு அதிகமாக எங்கள் நிலைமைகளை ஆராய்ந்து பார்க்க வேண்டும். அதாவது, கிறிஸ்துவின் சாயலை அணியும்படியாக, எங்கள் உள்ளான மனிதன் நாளுக்கு நாள் புதிதாக வேண்டும். கடந்த ஆண்டிலே விட்ட குறைகள் என்ன? அந்தக் குறைக ளிலே நாம் தரித்து நிற்கின்றவர்கள் அல்லர். அந்த குறைகளிலே நாங்கள் கற்றுக் கொண்ட பாடம் என்ன? எப்படி இந்த ஆண்டிலே மறு படியும் அந்த விடயத்திலே பின்னடைவைக் காணாமல் முன்னேறிச் செல்வது? இப்படியாக எங்கள் மேலான இலக்கை அடையும் வரைக் கும் நாங்கள் எங்கள் எங்கள் சொந்த வாழ்க்கையை ஆராய்ந்து பார்க்க வேண்டும். தேவனை அறிக்கின்ற அறிவிலே நாம் முன்னேறிச் செல்ல வேண்டும். இப்படிப்பட்ட எண்ணம் ஆண்டின் முதலாம் நாளோடு முடிந்து போகக் கூடாது. கர்த்தருடைய வேதத்தை இரவும் பகலும் தியானிக்கும் போது, எங்களுடைய வாழ்க்கையை நாங்கள் அந்த வார்த்தையின் வெளிச்சத்தில் தினமும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஆராய்ந்து பார்த்து நலமானதைப் பற்றிக் கொள்ளும்படி தீர்மானம் செய்ய வேண்டும். துணையாளராகிய தேவ ஆவியானவர் எங்களை பெலப்படுத்தி வழிநடத்துவார்.

**சங்கீதம் 119:59**

என் வழிகளைச் சிந்தித்துக் கொண்டு, என் கால்களை உம்முடைய சாட்சிகளுக்கு நேராகத் திருப்பினேன்.

**ஜெபம்**: பரிசுத்தமான தேவனே, ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மாதமும், ஒவ்வொரு ஆண்டும் என் வழிகளை ஆராய்ந்து பார்த்து உம்மை கிட்டிச் சேர நீர் என்னை வழிநடத்திச் செல்வீராக.. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவ சமாதானத்தை காத்துக் கொள்ளுங்கள்

தன் உடன் சகோதரரோடு ஏற்பட்ட துன்பமான சம்பவத்தைக் குறித்து பல மாதங்களாக ஒரு மனிதன் சிந்தித்துக் கொண்டிருந்தான். தன் நிலையை நியாயப்படுத்துவது எப்படி என்பதைக் குறித்து பல நாட்களாக சிந்தித்து ஆராய்ந்து தனக்கு சாதகமாக ஏதாவது வேத வார்த்தைகளை கூற முடியுமா என்று தேடிப்பார்த்தான். நாடகள் செல்லச் செல்ல அவன் வாழ்வை சுயநீதி மேற்கொள்வதை உணராமல் கசப்பு தன் இருதயத்திலே வளர்வதற்கு இடம் கொடுத்து வந்தான். ஆண்டு முடிவிலே தன் வாழ்வில் தேவன் தந்த சமாதானத்தை தொலைத்துவிட்டேன் என்பதை திட்டமாக உணர்ந்து கொண்டான். புதிய ஆண்டிலே, பிரவேசிக்கும் முன், தன் உடன் சகோதரனோடு எப்படியாவது நான் பேசி ஒப்புரவாகுவேன் என்று தீர்மானம் செய்து கொண்டான். தன் இருதயத்தில் இருந்த சுய கௌரவத்தைவிட்டு இறங்குவது மிகவும் கடினமாக இருந்தது. "என் உறவினர் என்னை மானம் கெட்டவன் என்று சொல்வார்களே? என் நண்பர்கள் என்னைப் பற்றி என்ன நினைப்பார்கள்? என் ஆதரவாளர்கள் என்ன நினைப்பார்கள்?" என்ற சிந்தை அவனை அதிகம் வாட்டியது. சில நாட்களாக, வெளியே சொல்ல முடியாத பெரும் போராட்டம் மனதிலே ஓடிக் கொண்டிருந்தது. படுக்கையிலே இருந்து கடுமையாக யோசித்துக் கொண்டிருந்தான். அப்போது " உனக்காக பாடுகள் பட்டு, உன் பாவங்களை மன்னித்து, உன்னை தன் பிள்ளையாக்கிய இயேசு உன்னைப் பற்றி என்ன நினைப்பார்" என்கின்ற வார்த்தை அவன் மனதிலே ஒலித்துக் கொண் டிருந்தது. காலை எழுந்ததும், கால தாமதம் இல்லாமல், தன் உடன் சகோதரனுடைய வீட்டிற்கு சென்றான். அவனோடு பேசி, ஒப்புரவாகினான். சொல்லமுடியாத பெரும் விடுதலை தன் மனதிலே உருவாகியதை அவன் உணர்ந்து கொண்டான். வேத வார்த்தையின் ஆலோசனையிலே இருக்கும் சந்தோஷத்தை உணர்ந்து கொண்டான். பிரியமானவர்களே, தேவ சாமாதானம் உங்களது இருதயங்களை ஆளுகை செய்ய விரும்பினால், மனக்கசப்பை உங்களை விட்டு அகற்றிவிடுங்கள். காலத்தை தாமதிக்காமல், உங்களைத் தாழ்த்தி மற்றவர்களுடன் ஒப்புரவாகுங்கள்.

**கொலோசெயர் 3:13**

ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர்பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்தது போல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்.

**ஜெபம்**: சமாதானத்தின் தேவனே, நீர் தந்த சமாதானத்தை நான் காத்துக் கொள்ளும்படிக்கு, கசப்பான வேர் முளைத்தெழும்பி கலகம் உண்டாக்காதபடிக்கு என் இருதயத்தை காத்துக் கொள்ள கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# வீட்டின் சூழ்நிலைகள்

ஒரு ஊரிலே வசித்து வந்த மனிதனானவன், மோட்டார் வண்டிகளை பழுதுபார்ப்பதில் தேர்ச்சிபெற்றவனாக இருந்ததால், அவன் தன் வீட்டின் ஒரு கோடிப் பக்கமாக வைத்து ஊரிலுள்ள மனிதர்களின் மோட்டார் வண்டிகளை பழுதுபார்த்து தனக்கு ஆதாயம் உண்டுபண்ணினான். அந்த சூழ்நிலையிலே வளர்ந்து வந்த அவன் குடும்பத்தார் அனைவரும், மோட்டார் வண்டிகளைக் குறித்த காரியங்களை அனுதினமும் கேட்டு வந்ததால், அவர்களும் மோட்டார் வண்டிகளைக் குறித்து அறிவுடையவர்களாக இருந்தார்கள். இதனால் அவனுடைய பிள்ளைகள் தங்கள் இளம்வயதிலேயே பலதிருத்த வேலைகளை செய்து வந்தார்கள். கருப்பொருளாவது, பொதுவாக மனிதர்கள் வளர்ந்து வரும் சுற்றாடல் அவர்களின் அறிவையும் பழக்கவழக்கங்களையும் மாற்றும் ஒரு முக்கிய காரணியாக உள்ளது. ஒரு வீட்டிலே காலையிலிருந்து மாலை வரைக்கும் சினிமா திரைப்படங்களே ஓடிக் கொண்டிருக்குமென்றால் அங்கு வளர்ந்து வரும் சிறார்கள் திரைப்படங்களையும், நடிகர்களையும், அதன் பாடல்களையும் நன்கு அறிந்தவர்களாக வளர்ந்து வருவார்கள். இன்னுமொரு வீட்டிலே, தேவனை புகழ்ந்து பாடும் சங்கீதங்களும், கீர்த்தனைகளும், ஞானப் பாட்டுகளும், வேத வார்த்தைகளும் பேசப்படுமென்றால் பிள்ளைகளும் அந்த சூழ் நிலைகளிலே அவற்றை பற்றிக் கொள்வார்கள். இன்று பிள்ளைகள் தேவ பயத்துடன் வளர்ந்து வருவதற்கு தடையான காரியங்களை பல பெற்றோரும் மூத்தவர்க ளும் வீடுகளிலே செய்து வருகின்றார்கள் என்பதை செய்திகள் வாயிலாக அறிந்து கொள்கின்றோம். தங்கள் வீடுகளை மதுபான சாலையாகவும், சினிமா கொட்டகைகளாகவும், களியாட்ட விடுதிகளாகவும் (Party House), தகாத வார்த்தைகளை பேசுமிடமாகவும், சண்டைகளை பிணைக்குமிடமாகவும் மாற்றிக் கொள்கின்றார்கள். இது ஒரு பரிதாபமான நிலை. மனிதன் எதை விதைக்கின்றானோ அதையே அறுப்பான் என்று வேதம் தெளிவாக கூறுகின்றது. எனவே நீங்கள் எத்தகைய சூழ்நிலைகளை உங்கள் வீடுகளில் நாளாந்தம் ஏற்படுத்துகின்றீர்கள் என்பதைக் குறித்து மிகவும் எச்சரிக்கையாயிருங்கள். யாவரும் தேவ பயத்தோடு வாழும்படிக்கான சூழ்நிலைகளை எங்கள் இல்லங்களிலே நாங்கள் ஏற்படுத்த வேண்டும்.

**கலாத்தியர் 6:8**

தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான் ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்தியஜீவனை அறுப்பான்.

**ஜெபம்**: அன்பின் தகப்பனே, பயபக்தியோடு உம்மை சேவிப்பதற்கு தடையான சூழ்நிலைகளை நான் ஏற்படுத்தாமல் பரிசுத்தத்தை காத்துக் கொள்ளும்படிக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமேன்

# சுய பெருமை

இந்த உலகிலே தங்களை நீதிமான்களென்று கூறிக் கொண்டு, மற்றய மனிதர்களை அற்பமாக எண்ணுபவர்களை நாங்கள் கண்டிருக்கிறோம். சில வேளைகளிலே தேவனுடைய பிள்ளைகளும் அப்படிப்பட்ட பெருமைக்குள் தங்களை அறியாமலே சிக்கிக் கொள்வதுண்டு. இவ்வண்ணமாகவே இயேசு இந்த உலகிலே வாழ்ந்த நாட்களிலே பரிசேயர் என்ற ஒரு சாரார் இருந்தார்கள். இப்படிப்பட்டவர்களைக் குறித்து இயேசு ஒரு உவமையை கூறினார். இரண்டு மனுஷர் ஜெபம்பண்ணும்படி தேவாலயத்துக்குப் போனார்கள் ஒருவன் பரிசேயன், மற்றவன் ஆயக்காரன். பரிசேயன் நின்று: தேவனே! நான் பறிகாரர், அநியாயக்காரர், விபசாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப்போலவும், இந்த ஆயக்காரனைப்போலவும் இராததனால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன் என்றான். ஆயக்காரன் தூரத்திலே நின்று, தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக்கொண்டு: தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்றான். இந்த பரிசேயன் கூறியவற்றில் அவன் தன் வாழ்க்கையை குறித்து கூறியவற்றிலும், அந்த ஆயக்காரனைக் குறித்து கூறியவற்றிலும் உண்மை இருந்தது. பரிசேயரிடத்தில் தங்கள் மதத்தை குறித்த வைராக்கியம் அதிகமாக இருந்தது. இவர்களில் அநேகமானோர், மத சடங்காச்சாரங்களை கிரமமாக பின்பற்றி வந்த போதிலும் தேவனுடைய நியாயத்தையும், தேவனுடைய அன்பையும் குறித்த உணர்வற்ற இருதயமுடையவர்களாக இருந்து வந்தார்கள். இதனால் பெருமையும், சுயநீதியும் அவர்கள் வாழ்க்கையை மேற்கொண்டிருந்தது. தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கின்றார் தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கின்றார். எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தைபோல இருக்கிறது. பிரியமானவர்களே, கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டு, பரிசுத்தமாக்கப்படடு, நீதிமான்களாக்கப்பட்டிருக்கின்றோம். இது தேவனுடைய ஈவு. ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல. எனவே தேவனுடைய அன்பின் ஆழத்தையும் அதன் நோக்கத்தையும் உணர்ந்து கொள்ளுங்கள். எந்த ஒரு சமயத்திலும் சுயபெருமை எங்களை ஆட்கொள்ளாதடிக்கு எங்கள் இருதயங்களை காத்துக் கொள்ளவேண்டும்.

**லூக்கா 18:14**

**ஏனெனில் தன்னை உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்றார்.**

**ஜெபம்:** இருதயத்தை ஆராய்ந்து அறிகின்ற தேவனே, எந்த ஒரு சமயத்திலும் என்னுடைய கிரியைகளைக் குறித்து சுய பெருமை அடைந்து விடாதபடிக்கு என்னை காத்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

வெள்ளி | கார்த்திகை 13

📖 மாலை வாசகம் – எசேக்கியேல் 22:30

# தேவனுக்கு பிரியமான ஜெபம்

துன்மார்க்கன் தன் துன்மார்க்க வழிகளினாலும், பாவிகள் தங்கள் பாவங்களிலும் அழிந்து போவதைக் குறித்து தேவன் பிரியப்படுகின்றவர் அல்லர். தங்களை நீதிமான்கள் என்று அழைக்கின்ற மனிதர்களை அல்ல, பாவிகளை விடுதலையடையச் செய்ய வேண்டும் என்பதற்காகவே இயேசு இந்த உலகத்திற்கு வந்தார். தேவ ஆலயத்திற்கு ஜெபம் செய்ய சென்ற இரண்டு மனிதர்களில் ஒருவன் பரிசேயன், மற்றவன் ஆயக்காரன். பரிசேயர் என்ற குழுவினர் அன்றைய சமுதாயத்திலே பெரும் கனத்தை பெற்றிருந்தார்கள். ஆனால் ஆயக்காரர் என்பவர்களோ சமுதாயத்தினாலே புறக்கணிக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் சமுதாயத்தினாலே ஒடுக்கப்படுவதற்கு பல காரணங்கள் இருந்திருக்கலாம். ஆயக்காரர் உண்மையிலே சீர்கேடான வாழ்க்கையை வாழ்ந்திருக்கலாம். ஆனால் ஜெபிக்கச் செல்லும் தேவனுடைய நீதிமானின் பண்பு என்ன? சீர்கேடானவனுடைய வாழ்க்கையைக் கண்டு அவன் தன் பாவத்தில் அழிந்து போக வேண்டும் என்று எண்ணங் கொள்வது சரியாகுமா? அல்லது தேவனே இவனுடைய ஆத்துமாவும் பாதாளத்தில் அழிந்து போகாதபடிக்கு அவன் தன் வழிகளிலிருந்து விடுதலையடைய கிருபை செய்யும் என்று கூறுவது சரியாகுமா? ஒருவனும் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு பிதாவாகிய தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசுவை இந்த உலகிற்கு அனுப்பினார். எனவே, தேவனாலே நீதிமான்களாக்கப்பட்ட நாங்கள் ஜெபிப்பது இன்றியமையாதது. ஆனால் ஜெபிக்கும் போது, தேவனுக்கு பிரியமானவைகள் என்ன என்பதை அறிந்து அதன்படி நாங்கள் ஜெபிக்க வேண்டும். எங்களுடைய வாழ்க்கையில் இருக்கும் தேவ சமாதானத்திற்காக தேவனுக்கு நன்றி கூறுகின்ற வேளையிலே, தேவ சமாதானத்தை இழந்து இந்த உலகின் இருளுக்குள் அகப்பட்டிருக்கும் ஆத்துமாக்களும் தேவனிடம் திரும்ப வேண்டும் என்று நாங்கள் ஜெபிக்க வேண்டும். திறப்பின் வாசலிலே நின்று அக்கிரமங்களும் அநியாயங்களும் ஒழிந்து போகும்படியாக தேவனை நோக்கி தினமும் ஜெபிக்கின்ற தேவனுக்கு பிரியமான பிள்ளைகளாக நாம் வாழ வேண்டும்.

**எசேக்கியேல் 18:23**

துன்மார்க்கன் சாகிறது எனக்கு எவ்வளவேனும் பிரியமோ? அவன் தன் வழிகளை விட்டுத் திரும்பிப் பிழைப்பது அல்லவோ எனக்குப் பிரியம் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

**ஜெபம்**: அன்புள்ள தேவனே, பாவ சேற்றிலே வாழ்கின்ற மனிதர்கள் தங்கள் உணர்வற்ற வாழ்க்கையின் நிமித்தம் அழிந்து போகாதபடிக்கு, அவர்கள் யாவரும் உம்மிடம் திரும்ப கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

**சனி | கார்த்திகை 14** | 📖 மாலை வாசகம் – சங்கீதம் 103:8–13

# ஜெபத்தினால் உண்டாகும் விடுதலை

இயேசு அவ்விடம் விட்டுப் புறப்பட்டுப்போகையில், ஆயத்துறையில் உட்கார்ந்திருந்த மத்தேயு என்னும் ஒரு மனுஷனைக் கண்டு: எனக்குப் பின்சென்றுவா என்றார் அவன் எழுந்து அவருக்குப் பின்சென்றான். பின்பு அவர் வீட்டிலே போஜனபந்தியிருக்கையில், அநேக ஆயக் காரரும் பாவிகளும் வந்து, இயேசுவோடும் அவர் சீஷரோடுங்கூடப் பந்தியிருந்தார்கள். பரிசேயர் அதைக் கண்டு, அவருடைய சீஷர்களை நோக்கி: உங்கள் போதகர் ஆயக்கா ரரோடும் பாவிகளோடும் போஜனம் பண்ணுகிறதென்னவென்று கேட்டார் கள். இயேசு அதைக் கேட்டு: பிணி யாளிகளுக்கு வைத்தியன் வேண்டிய தேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை என்று கூறினார். அக்காலத்திலே வாழ்ந்த ஆயக்காரர் என்ற பிரிவினர் ரோமருக்கு வரி வசூலிப்பவர்களும், அநியாயம் செய்கின்றவர்களாயும் இருந்தார்கள். இப்படிப்பட்ட மனிதர்களில் ஒருவனும், தன்னை நீதிமான் என்று நம்பிய பரிசேயனுமே ஜெபி ப்பதற்காக சென்றார்கள். பரிசேயன், ஆயக்காரனை குறித்து கூறிய வைகள் உண்மை. ஆனால், ஜெபம் செய்யச் சென்ற ஆயக்காரன், பரிசேயன் கூறியவற்றைக் குறித்து அலட்டிக் கொள்ளாமல். தேவனை நோக்கிப் பார்த்தான். தன் நிலையை ஏற்றுக் கொண்டு தன்னை தேவ சமுகத்திலே தாழ்த்தினான். தன் பாவத்தை அறிக்கையிட்டான். விடுத லையை பெற்றுக் கொண்டான். நீதிமானாக வீடு திரும்பினான். பிரியமா னவர்களே, சில வேளைகளிலே எங்களைக் குறித்து மற்றவர்கள் கூறும் குறைகள் உண்மையுள்ளவைகளாக இருக்கலாம். அந்த நேரங்களிலே உங்கள் நிலையை நியாயப்படுத்த முயலாமல், தேவனுடைய சமுகத்திலே உங்களைத் தாழ்த்தி, அவரிடம் உண்மையை கூறுங்கள். "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்." (1யோவான் 1:9) கர்த்தர் உருக்கமும், இரக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையு முள்ளவர். அவர் நம்முடைய பாவங்களுக்குத்தக்கதாக நமக்குச் செய் யாமலும், நம்முடைய அக்கிரமங்களுக்குத் தக்கதாக நமக்குச் சரிக் கட்டாமலும் இருக்கிறார். ஜெபத்தின் பலனை பெற்றுக் கொள்ளு ம்படிக்கு உண்மையுள்ள மனதுடன் தேவனைச் கிட்டிச் சேருவோம்.

**மத்தேயு 9:12**

**இயேசு அதைக் கேட்டு: பிணியாளிகளுக்கு வைத் தியன் வேண்டியதேயல் லாமல் சுகமுள்ளவர்களு க்கு வேண்டியதில்லை.**

**ஜெபம்:** மனதுருகும் தேவனே, என்னுடைய குறைவுகளை ஒருபோதும் நியாயப்படுத்தாமல் உம்முடைய இரக்கத்தை பெறும்படிக்கு உண்மை யோடு உம்மை அண்டிச் சேரும் இருதயத்தை தந்தருள்வீராக. இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள்

**1 பேதுரு 5:8**

**தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்**

ஒரு தாயானவள் தன் மகனை அழைத்து, கடைக்கு சென்று இரவு ஆகாரத்திற்கும், நாளைய தினத்தின் ஆகாரங்களுக்குமான உணவுப் பொருட்களை வாங்கி வரும்படிக்கு தன் கணவருடைய அன்றாடைய உழைப்பின் பிரயாசத்தை அவனிடம் கொடுத்து, அவனை சீக்கரமாய் சென்று வரும்படி கூறியிருந்தாள். போகும் வழியிலே அவனுடைய நண்பர்கள், தெருவருகே இருந்த வயலொன்றில் கிரிக்கெற் விளையாடிக் கொண்டிருந்தார்கள். இரண்டு நிமிடங்கள் அங்கே தரித்திருந்து விளையாட்டை பார்த்துவிட்டு செல்வோம் என்று தெருவருகே தன் சைக்கிளுடன் நின்று கொண்டிருந்தான். அவனை கண்ட நண்பர்கள், அவர்களுடன் கொஞ்ச நேரம் விளையாடும்படி வருந்திக் கேட்டுக் கொண்டார்கள். அவனோ அரைமனதுடன் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி, அவர்களோடு சேரந்து விளையாடிய பின், அவசரவசரமாக கடைக்கு சென்றான். பொருட்களை வாங்கிய பின்பு, தன் காற்சட்டை பைக்குள் பணத்தை எடுக்கும்படி கையைப் போட்டான். தன் தாயார் கொடுத்த பணத்தை அங்கே காணவில்லை. தான் வந்த வழியே பணத்தை தேடிய வண்ணம், நண்பர்களோடு சேர்ந்து விளையாடிய வயலுக்குச் சென்றான். பொழுதுபட தொடங்கியதால் நண்பர்கள் யாவரும் வீடு சென்று விட்டார்கள். தான் ஓடி விளையாடிய இடம் முழுவதும் பணத்தை தேடினான், ஆனால் அவன் தேடுதல் வெற்றியளிக்கவில்லை. தன் தகப்பனானவர் முழு நாள் கஷ்டப்பட்டு உழைத்த கூலியை என் கவனயீனத்தால் தொலைத்துவிட்டேன் என்று மிகவும் துக்கத்துடன் வீடு திரும்பினான். பிரியமான சகோதர சகோதரிகளே, இந்த சம்பவத்தை சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். நான் எங்கே போகின்றேன்? எதற்காக போகின்றேன்? என்பதை குறித்து கவனமற்றவனாக இருந்த வாலிபன், இடையிலே தான் ஏற்படுத்திக் கொண்ட இடையூறுகளால் தன் பொறுப்பை அற்பமாக எண்ணி, தன் இலக்கை அடையாமற் போனான். இவ்வண்ணமாகவே, இந் நாட்களிலே, சிலர் தங்கள் அழைப்பின் இலக்கை மறந்து, தங்களுக்கு கொடுக்கப்பட்ட பொறுப்புக்ளை அற்பமாக எண்ணி வாழ் நாட்களை வீணடித்துக் கொள்கின்றார்கள். தேவன் எங்களுக்கு தந்திருக்கும் மேலான அழைப்பையும், நாங்கள் நிறைவேற்ற வேண்டிய பொறுப்பையும் குறித்து எப்போதும் விழிப்புள்ளவர்களாயிருப்போம்.

**ஜெபம்**: அழைத்த தேவனே, இந்த உலகத்தின் ஆசைகளால் நீர் எனக்கு தந்த பொறுப்பை அற்பமாக எண்ணாதபடிக்கு, எப்போதும் எச்சரிகையுள்ளவனா(ளா)க வாழ கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்

# நிலையானதை நோக்கி...

"செழிப்புள்ள கானான் தேசத்தை சுதந்திரமாக கொடுப்பேன்" என்று இஸ்ரவேல் ஜனங்களுக்கு தேவன் வாக்குரைத்திருந்தார். தேவனாகிய கர்த்தர் சொன்னதை அவர் செய்து முடிக்கின்றவர். அவர் நினைத்த காரியம் அவர் குறித்த நேரத்தில் நிறைவேறும். அதை ஒருவரும் தடை செய்ய முடியாது. இப்படியான வாக்குத்தத்தத்தை பெற்ற தேவ ஜன ங்கள் எகிப்திலே அடிமைகளாக இரு ந்தார்கள். பராக்கிரமமுள்ள எகிப்தின் ராஜாவாகிய பார்வோனின் கையிலிரு ந்து அவர்களை எவராலும் விடுதலை யாக்க முடியாதிருந்தது. தேவனானவர், எகிப்தியர் நடுவிலே சோதனைகளினா லும், அடையாளங்களினாலும், அற்புத ங்களினாலும், யுத்தத்தினாலும், வல்ல மையுள்ள கரத்தினாலும், ஓங்கிய புய த்தினாலும், மகா பயங்கரமான செயல் களினாலும், தம்முடைய ஜன ங்களை விடுவித்தார். அவர்கள் முன்னாக இரு ந்த செங்கடல் இரண் டாய் பிளந்தது. அவர்கள் பின்னாக வந்த பார்வோனின் சேனைகள் அவர்கள் கண்களுக்கு முன்பாக அழிந்து போயிற்று. இப்படியாக தேவன் மனுஷனைப் பூமியிலே சிருஷ்டித்த நாள்முதல், எவ்விட த்திலாகிலும் செய்யப்படாததும், கேள்விப்படாததுமான பலத்த காரிய ங்களை அந்த ஜனங்கள் கண்ணாரக் கண்டார்கள். ஆனால் அவர்கள் தேவன் நியமித்த ஊழியராகிய மோசேக்கு எதிரா கவும், தேவனுக்கு எதிராகவும் முறுமுறுக்க ஆரம்பித்தார்கள். எதற்காக முறுமுறுத்தார்கள்? வனாந்திரத்திலே சாப்பிட உணவு இல்லை. குடிக்கத் தண்ணீர் இல்லை. இறைச்சி இல்லை. இவ்வளவு பெரிதான தேவ மகத்துவங்களை கண்டவர்கள், தேவனிடம் கேட்டால் அவர்களுக்கு அருளாதிருப்பாரோ? நிச்சயமாக அருளிச் செய்வார். செழிப்புள்ள தேசத்திற்கு கொண்டு செல்வேன் என்று வாக்களித்தவர் அதை செய்யாதிருப்பாரோ? நிச்சயமாக நிறைவேற்றி முடிப்பார். இவற்றை நன்கு அறிந்திருந்தும் தேவனுடைய வார்த்தையை விசுவாசியாமற்போன படியினாலே, தாங்கள் தாபரிக்கும் ஊருக்கு செல்வதை அற்பமாக எண்ணி, தற்போது தங்கள் எண்ணப்படி உண்ணவும், உடுக்கவும், களியாட்டங்களில் ஈடுபடவும் தங்கள் மனதை மாற்றிக் கொண்டார்கள். பிரியமானவர்களே, இப்படிப்பட்ட விசுவாசமற்ற கிரியைகளை முற்றுமாய் அகற்றி விடுங் கள். வாக்குரைத்த தேவன், நித்திய வாழ்வை எங்களுக்கு தருவார் என்பதிலே உறுதியாய் நிலைத்திருங்கள்.

**1 யோவான் 2:25**

**நித்தியஜீவனை அளிப் பேன் என்பதே அவர் நம க்குச் செய்த வாக்குத்த த்தம்.**

**ஜெபம்:** ஜீவனுள்ள தேவனே, உம்மைவிட்டு விலகுவதற்கேதுவான அவி சுவாசமுள்ள பொல்லாத இருதயம் எனக்குண்டாதபடிக்கு, உம் வாக்குத் தத்தத்தை பற்றிக் கொள்ளும் உறுதியுள்ள இருதயத்தைத் தாரும். இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

செவ்வாய் | கார்த்திகை 17 📖 மாலை வாசகம் – உபா 4:39–40

# தேவனுக்கு பிரியமானவைகள்

அன்று தம்மால் தெரிந்து கொள்ளபட்ட ஜனங்கள் நடுவிலே தேவன் பலத்த கிரியைகளை நடப்பித்தார். செங்கடலை இரண்டாக பிளந்தார், தம்முடைய ஜனங்களுக்காக யுத்தம் செய்தார், கசப்பான நீரை மதுர மாக மாற்றினார். வானத்திலிருந்து தூதர்களின் உணவை அவர்களுக்கு கொடுத்தார். பகலிலே வெயில் சேதப்படுத்தாதபடிக்கு அவர் மேகத்தை மறைவுக்காக விரித்து, இரவை வெளிச்சமாக்குகிறதற்காக அக்கினியை யும் கொடுத்தார். கேட்டார்கள், அவர் காடைகளை வரப்பண்ணினார் வான அப்பத்தினாலும் அவர்களைத் திருப் தியாக்கினார். கன்மலையைத் திற ந்தார், தண்ணீர்கள் புறப்பட்டு, வற ண்ட வெளிகளில் ஆறாய் ஓடிற்று. தம்முடைய ஜனங்கள் நிலையான வாக்குத்தத்தத்தில் விசுவாசமுள்ளவர் களாக இருக்கும்படிக்கு இவைகளை செய்தார். ஆனால் அவர்களோ, வழு விப்போகின்ற இருதயமுள்ளவர்களா னார்கள். பிரியமானவர்களே, இவ் வளவு தேவ நன்மைகளை கண்டும் ஜனங்கள் உணர்வில்லாமல் போனார் களே, எவ்வளவு மதியீனமாய் நடந்து கொண்டார்கள் என்று இன்று அந்த ஜனங்களைக் குறித்து விசுவாசிகள் கூறிக் கொள்வதை நாங்கள் கேட்டிருக்கின்றோம். பிதாவாகிய தேவன் தாமே, ஒருவனும் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனையடையும்படிக்கு தம்முடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசுவை எங்களுக்காக கொடுத்திருக்கின்றார். அவர் வழியாக எங்களை தம்முடைய பிள்ளைகளாக மாற்றியிருக் கின்றார். ஏன் அப்படியாக செய்தார்? நாங்கள் யாவரும் கிறிஸ்து இயே சுவின் சாயலில் வளர வேண்டும். மனத் தாழ்மையையும் சாந்தத்தையும் அணி ந்து கொள்ள வேண்டும். பிதாவுக்கு பிரியமான பிள்ளையாக எப்படி இயேசு இருந்தாரோ, அதே போல நாங்களும் அவருக்கு பிரி யமான பிள்ளைகளாக அவருடைய திருச் சித்தத்தை நிறைவேற்ற வேண்டும் என்பதையே அவர் விரும்புகின்றார். சர்வ வல்லமையுள்ள தேவன் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர். அவர் அன்றும் இன்றும் என்றும் அற்புதங்களை செய்ய வல்லவர். ஆனால் அவர் எங்கள் உள் ளான மனிதனிலே உண்டாகும் மாற்றங்களை விரும்புகின்றார். தேவனுக்கு பிரியமான பிள்ளைகளாக வாழும்படிக்கு, எங்கள் மனம் நாளுக்கு நாள் புதிதாக்கப்படுவதாக.

**ரோமர் 12:2**

**தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.**

**ஜெபம்**: பரிசுத்தமுள்ள தேவனே, எங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் உமக்கு பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுத்து, உமக்கு பிரியமான வைகளை செய்ய எங்களுக்கு கற்றுத் தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவ ராஜ்யத்திற்குரியவைகளை நாடுங்கள்

ஒரு சமயம் இயேசு திபேரியாக்கடல் என்னப்பட்ட கலிலேயாக் கடலின் அக்கரைக்குப் போனார். அவர் வியாதிக்காரரிடத்தில் செய்த அற்புத ங்களைத் திரளான ஜனங்கள் கண்டபடியால் அவருக்குப் பின்சென் றார்கள். இயேசு மலையின்மேல் ஏறி, அங்கே தம்முடைய சீஷருட னேகூட உட்கார்ந்தார். ஜனங்கள் சாப்பிடும்படிக்கு அங்கிருந்த ஒரு சிறு பையனிடமிருந்த ஐந்து வாற்கோ துமை அப்பங்களையும் இரண்டு மீன் களையும் பலுகிப் பெருகச் செய்தார். அவ்விடத்திலே பந்தியிருந்த புருஷ ர்கள் மாத்திரம் ஏறக்குறைய ஐயா யிரம் பேராயிருந்தார்கள். யாவரும் திருப்தியாய் உண்ட பின்பு, அவர்கள் சாப்பிட்டு மீதியான துணிக்கைகளி னாலே பன்னிரண்டு கூடைகளை நிர ப்பினார்கள். இதை கண்ட ஜனங்கள் மறு நாளிலும் இயேசுவை தேடிச் சென்றார்கள். அவர்களின் தவறான மனநிலையை உணர்ந்து கொண்ட இயேசு அவர்களை நோக்கி: இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: நீங்கள் அற்புதங்களைக் கண்டதினால் அல்ல, நீங்கள் அப்பம் புசித்துத் திருப்தியானதினாலேயே என்னைத் தேடுகிறீர்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். அழிந்துபோகிற போஜனத்திற்காக அல்ல, நித்தியஜீவ ன்வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்திற்காகவே கிரியை நடப்பியுங்கள் அதை மனுஷகுமாரன் உங்களுக்குக் கொடுப்பார் அவரைப் பிதாவாகிய தேவன் முத்திரித்திருக்கிறார் என்றார். பிரியமானவர்களே, இயேசு அற்புதம் செய்ய வல்லவர். நித்திய வாழ்வை கொடுக்கும் வசனங்கள் அவரிடமே உண்டு. எனவே நாங்கள் அவரை தேடிச் செல்வது நல்லது. ஆனால், ஏன் நாங்கள் அவரை தேடிச் செல்கின்றோம் என்பதைக் குறித்து உணர்வுள்ளவர்களாக இருக்க வேண்டும். இந்த உலகத்தோடு அழிந்து போகும் உணவுக்கும், பொருட்களுக்கும் மட்டுமே இயேசுவை தேடுவோமாக இருந்தால், இயேசு கிறிஸ்துவானவர் இந்த உலகத்தி ற்கு வந்த மேலான நோக்கத்தை மறந்தவர்களாக இருப்போம். எங்கள் தேவைகளை என்னவென்று பரம பிதா அறிந்திருக்கின்றார். எனவே அவற்றை குறித்து கவலையடையாமல், தேவனுடைய ராஜ்யத்திற் குரிய மேன்மைகளை அடைந்து கொள்ளும்படிக்கு ஆண்டவராகிய இயேசுவை நாடிச் செல்ல வேண்டும்.

**மத்தேயு 6:33**

**முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவரு டைய நீதியையும் தேடுங் கள் அப்பொழுது இவை களெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்.**

**ஜெபம்**: நித்திய வாழ்விற்கென எங்களை அழைத்த தேவனே, இந்த பூமிக்குரியதும் அழிந்து போகிறதுமான பொக்கிஷங்களைத் தேடாமல், நித்தியத்திற்குரியவைகளை நாடித் தேட உணர்வுள்ள இருதயத்தை தந்தரு ள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# உணர்வுள்ள ஜீவியம்

பல வருடங்களாக ஒரு தொழிற்சாலையிலே நன்றாக வேலை பார்த்து வந்த ஒரு ஊழியனுக்கு பதவியுயவர்வு கொடுப்பதற்காக அந்த தொழிற்சாலையின் இயக்குனர் முடிவு செய்திருந்தார். அதன்படிக்கு, முன் குறித்த நாள் ஒன்றிலே காலை 9 மணிக்கு தலமையகத்திற்கு பயிற்ச்சிக்காக செல்லும் படிக்கு பணிக்கப்பட்டான். குறித்த நாள் நெருங்கியது, அந்த நாளுக்கு முதல்நாள் இரவு அவனுடைய நண்பனொருவன், தன்னுடைய வீட்டில் நடக்கும் கொண்டாட்டமொன்றிற்கு இவனை அழைத்திருந்தார். நான் சீக்கிரம் வீடு திரும்பி விடுவேன் என்று தன் மனைவியிடம் கூறிவிட்டு அந்த கொண்டாட்டத்திற்கு சென்றான். குறித்த நேரத்தில் அவன் விடைபெற எத்தனித்தபோது, இப்போது தான் கொண்டாட்டம் ஆரம்பிக்கின்றது, நீ என்ன சீக்கிரமாய் கிளம்புகின்றாய் என்று அவனுடைய நண்பர்கள் அவனை தடுத்து நிறுத்தினார்கள். உனக்கு கிடைத்திருக்கும் பதவியுயர்வையும் நாங்கள் கொண்டாட வேண்டும் என்று யாவரும் மதுபான கிண்ணத்தை தூக்கினார்கள். ஒரு கொஞ்சம் தான், உன்னுடைய வெற்றிக்காக, எனவே பருகிக் கொள், நீ சாவதில்லை என்று அவனிடமும் ஒரு கிண்ணத்தை கொடுத்தார்கள். இப்படியாக நேரம் போய் கொண்டிருந்தது. கொஞ்சம் கொஞ்சமாக மதுபானத்தை அருந்திக் கொண்டிருந்தவன், குடித்து வெறிக்க ஆரம்பித்துவிட்டான். நடுச்சாமம் சென்ற பின்பு வீடு திரும்பினான். காலையிலே குறித்த நேரத்திற்கு அவனால் எழுந்திருக்க முடியவில்லை. ஆதலால், பயிற்ச்சியின் நேரத்திற்கு தாமதமாகவே சென்றான். அவனை எதிர்பார்த்திருந்தவர்கள் அவன் அங்கு வந்த போது, அவன் கடந்த இரவிலே அதிகமாக வெறித்திருக்கின்றான் என்பதை அறிந்து கொண்டார்கள். இப்படிப்பட்ட ஒரு மனிதனுக்கு இவ்வளவு பொறுப்பான வேலையை கொடுக்க முடியாது என்று அவனுக்குரிய பதவியுயர்வை தொழிற்சாலையின் உப தலைவர்கள் ரத்து செய்துவிட்டார்கள். பிரியமானவர்களே, நீதிபரராகிய இயேசு வெளிப்பட காத்திருக்கும் நாங்கள், மிகவும் ஜாக்கிரதையுள்ளவர்ளாக வாழ வேண்டும். கடைசி நேரத்தில் தேவ வார்த்தையைவிட்டு விலகி எங்கள் ஆத்துமாவை பாவத்திற்கு ஒப்புக்கொடுக்காதபடிக்கு எங்கள் வழிகளை எப்போதும் நாங்கள் காத்துக் கொள்ள வேண்டும்.

**எசேக்கியேல் 18:26**

**நீதிமான் தன் நீதியை விட்டு விலகி, அநீதி செய்து அதிலே செத்தால், அவன் செய்த தன் அநீதியினிமித்தம் அவன் சாவான்.**

**ஜெபம்:** என்னை நீதிமானாய் மாற்றிய தேவனே, பொறுப்பற்ற ஊழியனைப் போல, அற்ப சந்தோஷத்திற்காக நித்திய ஜீவனை இழந்து போய்விடாதபடிக்கு, விழிப்புள்ளவனா(ளா)க வாழ கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# இரக்கத்தில் ஐசுவரியமுள்ள தேவன்

குற்றவாளிகளாகிய வேறே இரண்டுபேரும் இயேசுவோடேகூட கொலை செய்யப்படுவதற்குக் கொண்டுபோகப்பட்டார்கள். கபாலஸ்தலம் என்று சொல்லப்பட்ட இடத்தில் அவர்கள் சேர்ந்தபொழுது, அங்கே அவரை யும், அவருடைய வலதுபக்கத்தில் ஒரு குற்றவாளியையும், அவருடைய இடதுபக்கத்தில் ஒரு குற்றவாளியையும் சிலுவைகளில் அறைந்தார்கள். அன்றியும் சிலுவையில் அறையப்ப ட்டிருந்த குற்றவாளிகளில் ஒருவன்: நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்க ளையும் இரட்சித்துக்கொள் என்று அவரை இகழ்ந்தான். மற்றவன் அவ னை நோக்கி: நீ இந்த ஆக்கினை க்குட்பட்டவனாயிருந்தும் தேவனுக் குப் பயப்படுகிறதில்லையா? நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகி றோம் நாம் நடப்பித்தவைகளுக்குத் தக்க பலனை அடைகிறோம் இவரோ தகா ததொன்றையும் நடப்பிக்கவில்லையே என்று அவனைக் கடிந்துகொண்டு, இயேசுவை நோக்கி: ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும் போது அடியேனை நினைத்தருளும் என்றான். இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய் யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார். இந்த சம்பவத்தை சற்று சிந்தித்துப் பாருங்கள். இந்த குற்றவாளிகள் நியாயப்படி அவர்களு டைய துன்மார்க்கமான வழிகளுக்கு தக்க தண்டனையை பெற்றுக் கொ ண்டிருந்தார்கள். ஆனாலும், அவர்களில் ஒருவன், இயேசுவை நோக்கி "அடியேனை நினைந்தருளும்" என்று மன்றாடினான். அவன் மரிக்கும் தறுவாயில், அவனுடைய உண்மையான மனந்திரும்புதலைக் கண்ட இயேசு அவனுடைய பாவங்களை மன்னித்தார். விடுதலையை பெற்றுக் கொண்டான். துன்மார்க்கத்தில் வாழ்ந்த மற்றய குற்றவாளி, தன் துன்மார்க்கத்தைவிட்டு மனம்திரும்ப மனதில்லாமல், தன் ஆத்துமாவிலே விடுதலையைக் காணாமல் தன் துன்மார்க்கத்திலேயே மரித்தான். மன ந்திரும்பிய குற்றவாளி அவன் எச்சரிப்படைந்து, தான் செய்த எல்லா மீறுதல்களையும் விட்டுத் திரும்பியதால் அவன் தன் ஆத்துமாவை நித் திய மரணத்திலிருந்து காத்துக் கொண்டான். ஆம், தேவனுடைய இரக்கம் பெரிது. குற்றங்களை அவரிடத்தில் அறிக்கையிட்டு மனந்தி ரும்பினால் அவர் நிச்சயமாக விடுதலை தந்தருள்வார்.

**எசேக்கியேல் 18:27**

**துன்மார்க்கன் தான் செய்த துன்மார்க்கத்தை விட்டு விலகி, நியாயத்தையும் நீதியையும் செய்வானே யாகில், அவன் தன் ஆத்து மாவைப் பிழைக்கப்பண் ணுவான்.**

**ஜெபம்**: இரக்கத்தில் ஐசுவரியமுள்ள தேவனே, என் குற்றங்களை மன்னி த்தவரே, நான் ஒருபோதும் என் குற்றங்களை நியாயப்படுத்தாமல் உம்மி டம் கிட்டி சேரும்படிக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஒப்புவிக்கப்பட்டதை நீ காத்துக்கொள்

ஒரு முக்கியமான பரீட்சையொன்றிற்கு ஆயத்தப்பட்டுக் கொண்டிருக்கும் மாணவர்களில் பலர் ஆசிரியரின் அறிவுரையைக் கேட்டும் அதன்படி பாடங்களை கற்க மனதில்லாதவர்களாக இருந்தார்கள். அதனால் அந்த ஆசிரியர் தன்னுடைய கடமைகளை செய்வதில் தவறிவிடவில்லை. பரீட்சை முடிவுகள் வந்த போது அந்த ஆசிரியரின் அறிவுரையை கேட்டு அதன்படி பாடங்களை கற்றவர்களுக்கும், ஆசிரியரின் அறிவுரையை கேட்க மனதில்லாமல் அற்பமாக எடுத்துக் கொண்டவர்களுக்குமுரிய வித்தியாசம் யாவருக்கும் தெரிய வந்தது. இப்படிப்பட்ட அனுபவம் அந்த ஆசிரியருக்கு ஒவ்வொரு வருடமும் ஏற்படுவதுண்டு. ஆனால் ஆசிரியர் தன் தொழிலை செய்வதில் தளர்ந்து போகவில்லை. இதற்கொத்ததாகவே, தேவனுடைய பிரமாணங்களும் மனிதர்களுக்கு போதிக்கப்படுகின்றது. அதன்படி சிலர் தங்கள் வாழ்வைக் காத்துக் கொள்கின்றார்கள். வேறுசிலரோ கேட்டும் கேளாதவர்கள் போல தேவனுடைய பிரமாணங்களை அற்பமாக எண்ணுகின்றார்கள். சிலர் தேவனுடைய பிரமாணங்களை அற்பமாக எண்ணுவதால் நாங்கள் தேவனுடைய பிரமாணங்களை இனி எடுத்து கூறமாட்டோம் என்று கூற முடியுமா? இல்லை. அதற்கென்று நியமிக்கப்பட்ட நாங்கள் வாழ்வு தரும் தேவ பிரமாணங்களை கூறுவதில் தளர்ந்து போய்விட முடியாது. விதைப்பவன் ஒருவன் விதைக்கச் சென்ற போது, அவன் விதைக்கையில், சில விதை வழியருகே விழுந்தது. பறவைகள் வந்து அதைப் பட்சித்துப்போட்டது. சில விதை அதிக மண்ணில்லாத கற்பாறை இடங்களில் விழுந்தது. மண் ஆழமாயிராததினாலே அது சீக்கிரமாய் முளைத்தது. வெயில் ஏறினபோதோ, தீய்ந்துபோய், வேரில்லாமையால் உலர்ந்து போயிற்று. சில விதை முள்ளுள்ள இடங்களில் விழுந்தது. முள் வளர்ந்து அதை நெருக்கிப்போட்டது. சில விதையோ நல்ல நிலத்தில் விழுந்து, சிலது நூறாகவும், சிலது அறுபதாகவும், சிலது முப்பதாகவும் பலன் தந்தது. சில நிலங்கள் பலனற்றது போல, சிலருடைய இருதயங்களும் பலனற்ற நிலையிலிருப்பதால், உங்களுக்கு கொடுக்கப்பட்ட பொறுப்பிலிருந்து சோர்ந்து போய் விடாதிருங்கள். சீர்கேடான வீண்பேச்சுகளுக்கும், ஞானமென்று பொய்யாய்ப் பேர்பெற்றிருக்கிற கொள்கையின் விபரீதங்களுக்கும் விலகி, சோர்ந்து போகாதபடி வல்ல கிரியையை நடப்பியுங்கள். கர்த்தர் பெரிதான பலனை தந்தருள்வார்.

**1 தீமோத்தேயு 6:20**

**ஓ தீமோத்தேயுவே, உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்டதை நீ காத்துக்கொண்டு,**

**ஜெபம்**: அவனவனுடைய கிரியைகளுக்கு தக்க பலனை கொடுக்கும் தேவனே, நீர் எனக்கு ஒப்புவித்த பொறுப்பிலிருந்து சோர்ந்து போகமாமல் இருக்க பெலன் தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# மனநிறைவுள்ள வாழ்வு

யோனா என்னும் மனிதன் தேவனாலே அழைப்பைப் பெற்ற தீர்க்கதரிசியாக இருந்தான். கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு உண்டாகி, அவர்: நீ எழுந்து மகா நகரமாகிய நினிவேக்குப் போய், அதற்கு விரோதமாகப் பிரசங்கி அவர்களுடைய அக்கிரமம் என் சமுகத்தில் வந்து எட்டினது என்றார். அப்பொழுது யோனா கர்த்தருடைய வார்த்தையை கேட்டும் அவருடைய சமுகத்தினின்று விலகி, ஓடும்படி வேறொரு பட்டணத்திற்கு செல்லும் ஒரு கப்பலில் ஏறிக் கொண்டான். யோனா தனக்கு கொடுக்கப்பட்ட பொறுப்பிலிருந்து விலகி ஓடியதால் அவனுக்கும் கப்பலிலே அவனை சூழ இருந்த பயணிகளுக்கும் பெரும் குழப்பம் ஏற்பட்டது. அவன் தேவனுடைய ஊழியனாக இருந்தும், அவனுடைய மனதிலே சமாதானம் குலைந்து போய் விட்டது. பிதாவாகிய தேவன் தாமே, நாம் தம்முடைய குமாரர்களும் குமாரத்திகளாகும்படிக்கு உலகத்தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்துகொண்டார். அவருடைய அழைப்பை பெற்ற நாம், அந்த அழைப்பை நிறைவேற்றாமல், அதைவிட்டு விலகி ஓடுவோமாக இருந்தால் எங்கள் வாழ்விலும் எங்களை சூழ இருக்கின்றவர்களுடைய வாழ்விலும் பெரும் குழப்பங்களை ஏற்படுத்துவோம். இன்று தேவ அழைப்பை பெற்ற மனிதர்கள், வாழ்விலே ஏற்படும் சில உபத்திரவங்களை கண்டு “எனக்கு ஏன் இந்த வேலை, நான் வருவேன், என் விருப்பத்தின்படி ஜெபிப்பேன், பின்பு போய்விடுவேன்” என்று கூறிக் கொள்கின்றார்கள். அதனாலே பிரச்சனைகள் இல்லாமல் ஒதுங்கி வாழலாம் என்று எண்ணிக் கொள்கின்றார்கள். அதனால், சில பிரச்சனைகளை தவிர்த்துக் கொள்கின்றார்கள். ஆனால், தேவன் அழைத்த அழைப்பை நிறைவேற்றாமல் தன் விருப்பத்தின்படியே வாழும் மனிதனுடைய வாழ்விலே மனச் சமாதானம் நிலைத்திருக்காது. கிறிஸ்வதவர்கள் என்ற பெயரை தரித்த நாம், கிறிஸ்துவை தரித்தவர்களாக வாழும் போது மனதிலே பூரண சமாதானம் தங்கும். பிரியமானவர்களே, இந்த உலகத்திலே எங்களுக்கு உபத்திரவங்கள் உண்டு, அதனிமித்தம் சோர்ந்து போகாதிருங்கள். தீமை செய்து பாடுகளை அனுபவிப்பதைவிட நன்மை செய்து அநீதியை சகித்துக் கொள்வேதே மேலானது. எனவே சூழ்நிலைகளை கண்டு பின்வாங்கி போகாமல், பிதாவாகிய தேவனுடைய அழைப்பை நிறைவேற்றுவோம் அதற்குரிய பலனை தேவன் தந்தருள்வார்.

**சங்கீதம் 139:7**

**உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்? உம்முடைய சமுகத்தைவிட்டு எங்கே ஓடுவேன்?**

**ஜெபம்**: சமாதானத்தின் தேவனே, என் வாழ்விலே உம்முடைய அழைப்பை நிறைவேற்றுதன் மேன்மையை உணர்ந்து கொள்ளும்படிக்கு மனப் பிரகாசமுள்ள கண்களை தந்து என்னை வழிநடத்திச் செல்வீராக.இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நீதிமான்கள்

தீய வழியிலே நடக்கும் துன்மார்க்கனுக்கும், கொள்கை அடிப்படை யிலே நல்ல வழியிலே நடக்கும் சன்மார்கனுக்கும் இந்த உலகத்திலே தொல்லைகளும் கஷ்டங்களும் ஏற்படுகின்றது. அப்படியானால் அநீதி நிறைந்த இந்த உலகத்திலே, தேவனுடைய பிரமாணங்களின்படி வாழும் நீதிமானுடைய நிலை என்ன? ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த சில மனி தர்களுக்கிடையிலே கலவரம் ஏற்பட்ட தால், அந்த அயலிலே பெரிதான சண் டைகள் நடந்து கொண்டிருந்தது. அந்த அயலிலே துன்மார்க்கர்களும், சன்மார் க்கர்களும் இருந்தார்கள். அவர்கள் யா வருமே இந்த சண்டைகளினாலே பெ ரும் குழப்பமடைந்திருந்தார்கள். தங்கள் கொள்கைகளின்படி அந்த சூழநிலை களை அவர்கள் தீர்த்து வைக்க முயன் றார்கள். ஆனாலும் அந்த அயலிலே ஒரு நீதிமான் வாழ்ந்து வந்தான். அவன் அந்த ஊரை அரசாளும் ராஜாவை அறி ந்திருந்ததால், அந்த இக்கட்டான சூழ்நிலைகள் மத்தியிலும், ராஜாவினு டைய கட்டளையை பின்பற்றினான். ஏனெனில், ராஜா வரும் போது, இந்தக் குழப்பங்கள் யாவற்றிற்கும் நிச்சயமாக நீதி செய்வார் என்பதை அவன் அறிந்திருந்தான். எனவே பொறுமையோடு காத்திருந்தான். அவன் நம்பிக்கை வீண் போகவில்லை. பிரியமானவர்களே, இந்த சம் பவத்தை சற்று ஆராய்ந்து பாருங்கள். இந்த உலகிலே துன்மார்க்கன், சன்மார்க்கன், நீதிமான் யாவருக்குமே ஒரே விதமான சூழ்நிலைகள் ஏற்படு கின்றது. துன்மார்கன் தன் பொல்லாத வழிகளின்படி தன் முடிவுகளை எடுத்துக் கொள்கின்றான். சன்மார்க்கன் தன் கொள்கையின் அடிப்படையிலே வாழ்ந்து வருகின்றான். ஆனால் தேவனை நம்பி வாழும் நீதிமான் தன்னுடைய தேவனுடைய பிரமாணங்களின்படி தன் வாழ்க்கையை வாழ்கின்றான். நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும், கர்த்தர் அவைகளெல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார் என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. தேவனுடைய வழிகளிலே நடக்கும் நீதிமான், இரவும் பகலும் வேத வசனத்திலே தியானமாக இருக்கின்றான். அவன் தினமும் தன்னுடைய தேவனை நோக்கி ஜெபிக்கின்றவனாயிருக்கின்றான். ஆதலால் அவன் பொல் லாப்புக்கு விலகி தன் ஆத்துமாவை காத்துக் கொள்கின்றான். அவன் நம்புவது தேவனாலே ஆகும்.

**சங்கீதம் 34:15**

கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோ க்கமாயிருக்கிறது. அவரு டைய செவிகள் அவ ர்கள் கூப்பிடுதலுக்குத் திறந்திருக்கிறது.

**ஜெபம்:** நீதியின் தேவனே, உம்முடைய ஆலோசனைகளின் வழியிலே பூரண சமாதானம் உண்டு என்பதை உணர்ந்து, உம்முடைய வசனத்தை தியானித்து, உம்மிலே பெலன் கொள்ளும்படி கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கர்த்தருடைய வேதம்

எகிப்தின் பாவ அடிமைத் தனத்திலே அகப்பட்டிருந்த தம்முடைய ஜனங்களை தேவனாகிய கர்த்தர்தாமே தம்முடைய ஓங்கிய புயத்தினாலும் பலத்த கரத்தினாலும் விடுதலையாக்கி, பாலும் தேனும் ஓடுகிறதும் எல்லா தேசங்களின் சிங்காரமுமான தேசத்திலே அவர்களைக் வழிநடத்தி வந்தார். 1. அவர்கள் எகிப்தில் இருக்கும் போது அவரவர் தங்கள் கண்களால் எகிப்தின் அருவருப்புகளைக் நோக்கி, நரகலான விக்கிரகங்களால் தங்களைத் தீட்டுப்படுத்தியிருந்தார்கள். 2. அவர்கள் சென்றடையும் கானான் தேசத்து ஜனங்களின் அக்கிரமங்கள் மிகையாக இருந்தது. எனவே, தேவனாகிய கர்த்தர் தாமே, தம்முடைய ஜனங்கள் விட்டு வந்த எகிப்தின் நரகலான விக்கிரகங்களினால் தங்களை மறுபடியும் தீட்டுப்படுத்தாதபடிக்கும், அவர்கள் சென்றடையவிருக்கும் கானான் தேசத்தின் குடிகளின் பொல்லாத வழிகளினால் தங்களை கெடுத்துக் கொள்ளாதபடிக்கும், தம்முடைய வேதத்தை அவர்களுக்கு கொடுத்தார். அவற்றுள் பிரதானமாக தம்முடைய ஓய்வுநாளை அவர்களுக்கு கட்டளையாக கொடுத்தார். ஆனாலும் அவர்களுடைய இருதயம் அவர்களுடைய நரகலான விக்கிரகங்களைப் பின்பற்றினதுமல்லாமல், அவர்கள் என் நியாயங்களை வெறுத்து, என் கட்டளைகளில் நடவாமற்போய், என் ஓய்வுநாட்களைப் பரிசுத்தக் குலைச்சலாக்கினார்கள். எங்களுடைய வாழ்க்கையிலும், நாங்கள் விட்டு வந்த பழைய மனுஷனுக்குரிய அடிமைத்தனத்திற்குரிய கிரியைகளுக்கு நாங்கள் திரும்பாதபடிக்கும், தேவனை சந்திக்கும் நாள்வரைக்கும் எதிர்நோக்கவிருக்கும் பிசாசின் தந்திரங்களை ஜெயங்கொள்ளத் தக்கதாகவும், தம்முடைய நியமங்களை எங்களுக்கு கொடுத்திருக்கின்றார். நாங்கள் எங்கள் பழைய மனுஷக்குரிய மாம்சமான கிரியைகளினால் எங்களை தீட்டுப் படுத்தாமலும், எங்கள் வாழ்க்கையில் எதிர்நோக்கும் வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடுமுள்ள போராட்டங்களிலும் ஜெயங் கொள்ளும்படியாகவும் தேவனாகிய கர்த்தர் கொடுத்திருக்கும் சத்திய வேதத்தை பற்றிக் கொள்வோமாக. அவை களால் நாம் எச்சரிப்பை பெறுகின்றோம். அவைகளைக் கைக்கொள் ளுகிறவர்களுக்கு மிகுந்த பலன் உண்டு.

**சங்கீதம் 19:7**

**கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய சாட்சி சத்தியமும், பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது.**

**ஜெபம்**: நீதியின் தேவனே, வேதத்திலுள்ள அதிசயங்களின் மேன்மைகளை அறிந்து, அவைகளை பற்றிக் கொண்டு, அதன்படி வாழும்படிக்கு எனக்கு பிரகாசமுள்ள மனக் கண்களை தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

**புதன் | கார்த்திகை 25** | 📖 மாலை வாசகம் – கலாத்தியர் 3:23 – 25

# வாரத்தின் முதலாம் நாள்

பழைய ஏற்பாட்டின் வழிபாட்டு முறைமைகளின்படி வாரத்தின் ஏழாம் நாளை ஓய்வு நாளாக அனுசரித்து வந்தார்கள். அவர்களுக்கு கொடுக்கப்பட்ட "வழிபாட்டு முறைமைகளின்படி" பாவநிவர்த்திக்காக சர்வாங்க தகனபலிகளும், பாவநிவாரணபலிகளும் கொடுக்கப்பட்டு வந்தது. அந்நாட்களிலே அவர்கள் மிருக ஜீவன்களையும், பறவைகளையும், தானியங்களையும் பலியாகவும், காணிக்கையாவும் கொடுத்து வந்தார்கள். அந்த வழிபாட்டு முறைமையானது, இனி வரவிருக்கும் நன்மைகளின் நிழலாக இருந்து வந்தது. பிதாவாகிய தேவனின் அநாதி தீர்மானத்தின்படி, மனித குலத்தின் பாவத்தை போக்கும் பலியாக தேவ ஆட்டுக்குட்டியாக இயேசு கிறிஸ்து தம்மைத் தாமே ஒரே தரம் சிலுவையிலே பலியாக ஒப்புக் கொடுத்தார். குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டி யாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மனிதகுலத்திற்கு மீட்பு உண்டாயிற்று. இதுவே வரவிருந்ததும், தேவ தாசர்கள் எதிர்பார்த்திருந்ததுமான ஞானநன்மை. இவ்வண்ணமாக மீட்பராகிய இயேசு கிறிஸ்துவானவர் பாவங்களுக்காக ஒரே பலியைச் செலுத்தி, பழைய ஏற்பாட்டின் "வழிபாட்டு முறைமைகளை" நிறைவேற்றி முடித்தார். இதனிமித்தம் நித்திய மரணத்தை வென்று, பாதாளத்தை ஜெயித்து வாரத்தின் முதலாம் நாள் (ஞாயிற்றுக் கிழமை) அவரை பிதாவாகிய தேவன் தாமே உயிர்தெழச் செய்தார். அந்த நாள் கர்த்தருடைய நாளாக அனுசரிக்கப்பட்டு வருகி ன்றது. வாக்களிக்கப்பட்ட பரிசுத்த ஆவியானவரும் "பெந்தேகோஸ்து" நாளன்று, அதாவது கர்த்தர் உயிர்தெழுந்த நாளிலிருந்து ஐம்பதாவது நாள், வாரத்தின் முதலாம் நாள் (ஞாயிற்றுக் கிழமை) பிரதியட்சமாய் இறங்கி வந்ததும் குறிப்பிடத்தக்கது. எனவே கர்த்தருடைய நாளை சகல கனத்தோடும் பரிசுத்தமாய் அனுசரியுங்கள். ஆலயத்திற்கு சென்று பயபக்தியோடு, ஒருமனதோடு ஆராதனையில் கலந்து கொள்ள வேண்டும். ஆராதனைக்கு செல்லும் நேரத்தோடு மட்டும் அந்த நாள் முடிவடைந்து போவ தில்லை. கர்த்தருக்கென்று நியமிக்கப்பட்ட நாளிலே நாங்கள் இன்னும் அதிகமான தேவ காரியங்களைக் குறித்த தியானமுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

**யோவான் 20:19**

**வாரத்தின் முதல்நாளாகிய அன்றையத்தினம் சாயங்காலவேளையிலே, சீஷர்கள்கூடியிருந்த இடத்தில், யூதர்களுக்குப் பயந்ததினால் கதவுகள் பூட்டியிருக்கையில், இயேசு வந்து நடுவே நின்று: உங்களுக்குச் சமாதானம் என்றார்.**

**ஜெபம்**: பரிசுத்தமுள்ள பிதாவே,ஆவியோடும் உண்மையோடும் உம்மை ஆராதிக்கும்படிக்கு, ஆர்வத்தோடு ஆலயத்திற்கு செல்லவும், உம்முடைய நாளை பரிசுத்தமாக அனுசரிக்கவும் கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கர்த்தருடைய நாள்

அடுத்த ஊரிலே வசிக்கும் தன் வயதான பெற்றோரின் திருமண ஆண்டுநிறைவின் நாளில் அவர்களை சந்திப்பதற்காக வருவேன் என்று அவர்களுடைய மகன் கூறியிருந்தான். நாட்கள் நெருங்கிய போதோ, அவன் தன் குடும்பத்தில் எதிர்பாராத சில சவால்களை எதிர்நோக்கியிருந்தான். வேலைப் பழுவும் மிகவும் அதிகமாக இருந்தது. எனவே பெற்றோரை சந்திக்க செல்வது சாத்தியப்படாது என்பதை அவன் எதிர்நோக்கும் சூழ்நிலையை அவனுடைய பெற்றோருக்கு, அவன் மனைவி தொலைபேசி வழியாக தெரியப்படுத்தியிருந்தாள். அது உண்மையாக இருந்தபோதிலும், மகனானவனோ, தன் பெற்றோரை அவன் அதிகமாக நேசித்ததால், தன் காரியங்களை ஒழுங்குபடுத்தி, குறித்த நாளிலே பெற்றோரிடம் சென்றான். குறிப்பிட்ட அந்த நாளிலே தங்களது மகனைக் கண்ட பெற்றோர் பேரானந்தம் அடைந்தார்கள். இன்றைய நாட்களிலே, சில மனிதர்கள், "எல்லா நாட்களுமே கர்த்தருடையது எல்லாவற்றையும் நான் அவருக்கு கொடுத்துவிட்டேன்" என்று சொல்லுவதை நாங்கள் கேட்டிருக்கின்றோம். பூமியும் அதன் நிறைவும் அதன் குடிகளும் கர்த்தருடையது. எல்லா நாட்களுமே கர்த்தருடையது என்பது உண்மை. அதனால், கர்த்தர் நியமித்த தம்முடைய நாளை எங்களுக்கு இஷ்டமானதை நாம் செய்து விட்டு, எங்களுடைய வசதியின்படி இன்னுமொரு நாளை கர்த்தருடைய நாள் என்று நாங்கள் நியமிக்க முடியாது. வனாந்தரத்திலே என்னுடைய ஓய்வுநாட்களை தீட்டுப்படுத்திய உங்கள் பிதாக்களைப் போல, நீங்கள் நடவாமல், என் ஓய்வு நாட்களைப் பரிசுத்தமாக்குங்கள் நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்று நீங்கள் அறியும்படிக்கு அவைகள் எனக்கும் உங்களுக்கும் அடையாளமாயிருக்கும் என்று தேவனாகிய கர்த்தர் தம்முடைய ஜனங்களுக்கு கூறினார். அதற் கமைய கர்த்தரை ஆராதிக்க நாம் கூடும் கர்த்தருடைய நாளை சகல கனத்தோடும் பரிசுத்தத்தோடும் அனுசரிக்க வேண்டும். அந்நாளிலே இந்த உலகத்திற்குரியவைகளை தேடும்படிக்கு, அழிந்து போகின்றவைகளை மேன்மைப்படுத்தி, கர்த்தருடைய நாளை நாங்கள் அற்பமாக எண்ணிக்கொள்ளக் கூடாது. இவ்வண்ணமாக செய்து வந்த தேவ ஜனங்கள், தாபரிக்கும் ஊருக்கு போகும் வழியிலே தங்களை அழித்துக் கொண்டார்கள். எனவே கர்த்தருடைய நாளை நாம் அசட்டை பண்ணாமல், மனவிருப்பத்தோடு அனுசரிக்க வேண்டும்.

**சங்கீதம் 122:1**

**கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவோம் வாருங்கள் என்று எனக்கு அவர்கள் சொன்னபோது மகிழ்ச்சியாயிருந்தேன்.**

**ஜெபம்:** என் தேவனாகிய கர்த்தாவே, கர்த்தருயை நாளை பரிசுத்தத்தோடும், பயபக்தியோடும், மனதார அனுசரிக்கும்படிக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஆலயத்திற்குப் போவோம் வாருங்கள்

யோனாஎன்னும் தீர்க்கதரிசி மூன்று நாள் மீனின் வயிற்றிலே இருந்தான். அங்கே இருந்து அவன் தேவனை நோக்கி விண்ணப்பம் பண்ணி, துதியின் சத்தத்தோடே உமக்கு பலியிடுவேன் என்று கூறினார். சவுல் ராஜா தாவீதை கொன்றுபோட வகை தேடியபோது, தாவீது மலைகளிலும், கெபிகளிலும் இருந்து தேவனை ஆராதித்து ஜெபம் பண்ணினான். பவுல் என்னும் தேவ ஊழியர், சுவிசேஷத்தின் நிமித்தம் அடிக்கப்பட்டு, காயங்களுடன் சிறையிலே போடப்பட்ட போது அங்கே இருந்து தேவனை துதித்தான். இவ்வண்ணமாக தேவனுடைய தாசர்கள் தங்களுக்கு இக்கட்டுகள் நேரிட்டபோதும், தாங்கள் இருக்கும் இடத்தை பொருட்படுத்தாது அங்கிருந்து தேவனை ஆராதித்தார்கள். ஆனால் அவர்களுடைய சூழ்நிலைகள் வழமைக்கு திரும்பிய போது, அவர்கள் தேவ ஆலயத்திற்கு சென்று, சக விசுவாசிகளோடு சேர்ந்து தேவனை ஆராதித்தார்கள். இவ்வண்ணமாக எங்களுடைய வாழ்க்கையிலும் இக் கட்டான சூழ்நிலைகளை கடந்து வந்திருக்கின்றோம். பல நாடுகளிலே, யுத்த நாட்களிலே, பலர் குழியிலிருந்தும், முகாம்களிலிருந்தும் தேவனை ஆராதித்து வந்தார்கள். இந்நாட்களிலே ஏற்பட்டிருக்கும் கொள்ளை நோயின் காரணமாக, பலர் நேரலையில் தேவனை ஆராதிக்கின்றார்கள். ஏன் அப்படிச் செய்கின்றார்கள்? அது அவர்களுடைய வழக்கமான ஆராதனை முறைமையா? எந்த சூழ்நிலைஏற்பட்டாலும் நாங்கள் தேவனை ஆராதிப்பதை விட்டுவிடப் போவதில்லை, தேவனை துதிப்பது எங்கள் வாழ்வின் அடிப்படையா னதும் பிரதானமானதும் என எங்கள் கிரியைகள் வழியாக நாங்கள் வெளிக்காட்டுகின்றோம். ஆனால், சூழ்நிலை வழமைக்கு திரும்பும் போது, கர்த்தருடைய ஆலயத்திற்கு மகிழ்ச்சியோடு சென்று, ஒருவரை ஒருவர் வாழ்த்தி, விசாரித்து, ஒருமனதோடு தேவ னை ஆராதிப்போம். மனிதர்களுடைய வாழ்க்கையிலே வயோதிபம், உடல்நிலை, தவிர்க்கமுடியாத சூழ்நிலைகள் காரணமாக, வீடுகளிலும், மருத்துவ மனைகளி லும், பராமரிப்பு நிலையங்களிலும், சிறைச் சாலை களிலுமிருந்து தேவனை ஆராதிக்கின்றார்கள். அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் சூழ்நிலையை கர்த்தர் அறிவார். ஆனால் ஆலயம் சென்று சகோதர சகோதரிகளை தரிசித்து, சபையாக தேவனை ஆராதிப்பதை நாங்கள் எங்கள் வழமை யாக்கிக் கொள்ள வேண்டும். சபை கூடிவருதலை விட்டுவிடாதிருங்கள்.

**சங்கீதம் 133:1**

**இதோ, சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது?**

**ஜெபம்:** கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவோம் வாருங்கள் என்று கூறும்போது மனமகிழ்ச்சியோடு சென்று, சகோதரராய் ஒருமித்து உம்மை ஆராதிக்கும் உள்ளத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவன் எங்களோடிருப்பதை வாஞ்சிப்போம்

பல ஆண்டுகளாக, பல சிரமங்கள் மத்தியிலே, ஒரு காரியாலயத்திலே வேலை பார்த்து வந்த தகப்பனானவருக்கு, அவர் வசிக்கும் ஊரிலிருந்து சற்று தொலைவிலுள்ள குறித்த காரியாலயத்தின் தலைமையகத்திலே பதவியுயர்வுடன் நல்லதொரு வேலை கிடைத்தது. ஆனால், தினமும் அங்கு சென்று வரமுடியாது. எனவே அவர் தன் குடும்பத்தை தன் ஊரிலே விட்டுவிட்டு, காரியாலயத்தின் தலைமையகம் அமைந்துள்ள பட்டணத்தில், காரியாலயத்தினால் கொடுக்கப்படும் வதிவிடத்திலே வசிக்க வேண்டும். மூன்று அல்லது ஆறுமாதங்களுக்கு ஒரு முறை, விடுமுறை நாட்களில் தன் ஊருக்கு திரும்ப முடியும். தாராளமான சம்பள உயர்வுடன், மிகையூதியம் (Bonus) மற்றும் பல சலுகைகளுடனான இந்த பதவியுயர்வு அவருக்கு கிடைத்த ஒரு அருமையான சந்தர்ப்பம். அந்த வேலைக்கு சம்மதம் தெரிவிக்கும் முன்னைய இரவன்று, அவருடைய மகளானவள் தன் தகப்பனானவரை நோக்கி: அப்பா, நாங்கள் குடும்பமாக சில கஷ்டங்களை அனுபவித்தாலும், நீங்கள் எங்களுடனே இருப்பதையே விரும்புகின்றேன். புதிய வேலையில் கிடைக்கும் சலுகைகள் எனக்கு வேண்டாம் நீங்கள் தினமும் எங்களோடு இருப்பதே எனக்கு வேண்டும் என்று கூறினாள். தன் மகள் தன்மேல் வைத்திருக்கும் அன்பை நினைக்கையில், தகப்பனானவரின் உள்ளத்தில் சொல்ல முடியாத மகிழ்ச்சி பெருகிற்று. எந்த தயக்கமும் இன்றி தான் செய்து வந்த வேலையையே தொடர்ந்து செய்வதற்கு தகப்பனானவர் முடிவெடுத்தார். பிரியமானவர்களே, எங்கள் பரம தந்தையும் எப்போதும் எங்க ளோடு உறவாடவே விரும்புகின்றார். எங்கள் மத்தியிலே வாசம் செய்ய விரும்புகின்றார். ஆனால், பொருட்களை வேண்டும்படி கடைக்கு செல்வது போல நாங்கள் அவரிடம் செல்லக் கூடாது. அவரிடம் நன்மைகள் உண்டு. நாங்கள் நித்திய வாழ்வை பெற்று சதா காலமும் தம்முடைய பரம வீட்டிலே நீடூழியாய் வாழ வேண்டும் என்பதையே அவர் விரும்புகின்றார். எனவே, நாமும் அந்த மகளைப் போல, பொருட்களல்ல, நீர் எங்களோடு இருப்பதையே வாஞ்சிக்கின்றோம் என்று மனதார அவரிடம் கூற வேண்டும். மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவதுபோல, தேவனே, என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது என்று சங்கீதக் காரன் வாஞ்சித்தது போல தேவனானவர் எங்களோடு இருப்பதையே நாம் வாஞ்சிக்க வேண்டும்.

**சங்கீதம் 122:1**

என் ஆத்துமா தேவன்மேல், ஜீவனுள்ள தேவன்மேலேயே தாகமாயிருக்கிறது.

**ஜெபம்**: அன்புள்ள பிதாவே, இந்த உலகப் பொருட்களுக்காக உம்மை நாடித் தேடாமல், உம்மை உண்மையாக நேசித்து, உம்மை நாடித் தேட உணர்வுள்ள இருதயத்தைத் தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# உன்னத ஆசீர்வாதங்கள்

தன் வேலையிலே முன்னேற்றங்களையும், குடும்பத்திலே பொருளாதார வளர்ச்சியையும் கண்ட மனிதன், "தேவன் என்னை ஆசீர்வதித்திருக்கி ன்றார்" என்று தன் பாட்டனாரிடம் கூறினார். அதற்கு பாட்டனார்: மகனே, உலகிலே வாழும் மனிதர்கள் தேவ ஆசீர்வாதத்தின் அளவுகோலாக பொருளாதாரத்தை முதலிடத்திலே வைத்திருக்கின்றார்கள். தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரி யனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர் கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார். தேவன் மனிதர்களின் கைகளின் பிர யாசத்தை ஆசீர்வதிப்பது உண்மை. ஆனால் இந்த உலகமும் அதிலுள்ள பொருட்களும் அழிந்து போகும். அவை நிலையானவைகள் அல்ல. கைகளின் பிரயாசத்தை ஆசீர்வதிக்கும் கர்த்தர், "பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கவேண்டாம் இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும் இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள். பரலோகத்திலே உங்க ளுக்கு பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள் அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை. அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடு கிறதும் இல்லை. உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும். எனவே உன்னிடத்தில் வந்த ஐசுவரியம் தேவனிடத்திலிருந்து வந்த ஆசீர்வாதமாக இருந்தால், அதற்கு ஒரு காரணம் இருக்கும். அதை உணர்ந்தவனாய், மனத் தாழ்மையுடன் தேவ சித்தத்தை நிறைவேற்று. தம்முடைய குமாரனாகிய இயேசுவின் **விலை மதிக்க முடியாத** இரத்தத்தினாலே பாவ அடிமைத் தனத்திலிருந்து எங்களை விடுதலையாக்கி, தம்முடைய ராஜ்யத்தின் உடன் பங்காளி களாகும்படி எங்களை தகுதிப்படுத்தியிருக்கின்றார். அதைவிட பெரி தான ஆசீர்வாதம் ஒன்றுமில்லை. அத்தோடு உன்னதங்களிலே ஆவிக் குரிய சகல ஆசீர்வாதத் தினாலும் நம்மை ஆசீர் வதித்திருக்கிறார்.அந்த பெரிதான ஆசீர்வாதத்தை எல்லா காவலோடும் நாங்கள் எப்போதும் காத்துக் கொள்ள வேண்டும். தேவனால் வரும் வேறெந்த ஆசீர்வாத மும் இந்த பெரிதான ஆசீர்வாதத்திற்கு முரணானது அல்ல என்று பதில் கூறினார். ஆம் பிரியமானவர்களே, தேவன் அருளிய உன்னதமாக ஈவுகளை எண்ணிப் பாருங்கள். அழியாத அந்த ஆசீர்வாதங்களை இறுகப் பற்றிக் கொள்ளுங்கள்.

**எபேசியர் 1:3**

**அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக் குரிய சகல ஆசீர்வாதத் தினாலும் நம்மை ஆசீர் வதித்திருக்கிறார்.**

**ஜெபம்**: நிலையான ராஜ்யத்திற்கு எங்களைத் தகுதிபடுத்திய தேவனே, நீர் எங்களுக்கு அருளியிருக்கும் உன்னத ஆசீர்வாதங்களை கண்டு கொள்ளு ம்படிக்கு மனப் பிரகாசமுள்ள கண்களைத் தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கர்த்தருடைய ஆசீர்வாதம்

நீ பட்டணத்திலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய் வெளியிலும் ஆசீர்வதிக்க ப்பட்டிருப்பாய். உன் கர்ப்பத்தின் கனியும், உன் நிலத்தின் கனியும், உன் மாடுகளின் பெருக்கமும், உன் ஆடுகளின் மந்தைகளுமாகிய உன் மிருகஜீவன்களின் பலனும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும். உன் கூடையும், மாப்பிசைகிற உன் தொட்டியும் ஆசீர் வதிக்கப்பட்டிருக்கும். நீ வருகையி லும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய், நீ போகையிலும் ஆசீர்வதிக்கப்பட்டி ரு ப்பாய் என்று பரிசுத்த வேதாகமத் திலே வாசிக்கின்றோம். இந்த ஆசீர் வாதத்திற்கு உரித்தானவர்கள் யார்? நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்த த்துக்குச் செவிகொடுக்கும்போது, இப் பொழுது சொல்லப்படும் ஆசீர்வாதங்களெல்லாம் உன்மேல் வந்து உன க்குப் பலிக்கும். தேவனாகிய கர்த்தருடைய கட்டளைகளி ன்படியெ ல்லாம் செய்ய நீ கவனமாயிருக்கும்படிக்கு, அவர் சத்தத்திற்கு உண் மையாய்ச் செவிகொடுப்பாயானால், உன் தேவனாகிய கர்த்தர் பூமியி லுள்ள சகல ஜாதிகளிலும் உன்னை மேன்மையாக வைப்பார். இந்த உலகத்தின் ஐசுவரியத்தை நாடித் தேடும் மனிதர்கள் அதினாலே ஒரு போதும் மனத் திருப்த்தியடைவதில்லை. அது சோதனையிலும் கண்ணி யிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழச் செய்கின்றது. கர்த்தரால் ஐசுவரியத்தைப் பெற்றவன், கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளில் நடக்கின்றான். அவன் திரான செல்வத்திலே களிகூருகின்றது போல, கர் த்தருடைய கற்பனைகளிலே களிகூருகின்றான். கர்த்தருடைய ஆசீர் வாதம் ஐசுவரியத்தை தரும். அந்த ஐசுவரியம் கர்த்தரால் உண்டாயி ருந்தால், அவர் அந்த ஐசுவரியத்தோடு அவர் “போதும் என்கிற மனதை யும்” (மனத்திருப்தி) கொடுக்கின்றார். அதனால், ஐசுவரியமானது அவ னுக்கு வேதனையாக மாறிவிடுவதில்லை. உலக பொருளின் ஆசை அவ னை பற்றிக் கொள்வதில்லை. ஆம் பிரியமான சகோதர சகோதரிகளே, இன்று நீங்கள் எல்லாச் சூழ்நிலைகளிலும் கர்த்தருக்குள் மனரம்யமாக இருக்க கற்றுக் கொண்டால், அது தேவனாலே உண்டான ஆசீர்வாதமாக இருக்கின்றது. உலக பொருளைக் குறித்த ஆசை, எப்போதுமே இருதய த்தில் விதைக்க ப்பட்ட தேவனுடைய வார்த்தையை நெருக்கிப் போடும். கர்த்தருக்கு பயந்து அவர் வழியிலே நடவுங்கள். மனத்திருப்தியடையக் கூடிய ஆசீர்வாதத்தை அவர் நமக்கு தந்தருள்வார்.

**நீதிமொழிகள் 10:22**

கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும் அதனோடே அவர் வேதனையைக் கூட்டார்.

**ஜெபம்**: ஆசீர்வதிக்கும் தேவனே, வேதனை உண்டாக்கும் ஐசுவரியத்தை நான் நாடித் தேடாமல், போதும் என்கின்ற மனதுடனே கூடிய ஆசீர்வா தத்தை நீர் எனக்கு தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

உள்ளான மனிதன் மாதாந்த இலவச பிரதி

# விண்ணப்பப் படிவம்

**முழுப் பெயர் FULL NAME:**

**முகவரி ADDRESS:**

**நகரம் CITY:** **மாநிலம் PROVINCE:**

**தபால் குறியீடு POSTAL CODE:**

## மேலதிக விபரங்கள்

**whatsApp** வாயிலாக தியான குறிப்புகளை பெற விரும்புகின்றேன் ☐

**Viber** வாயிலாக தியான குறிப்புகளை பெற விரும்புகின்றேன் ☐

(**whatsApp Viber** வாயிலாக பெற விரும்பினால் உங்கள் கை தொலைபேசி இலக்கத்தைக் கீழே குறிப்பிடவும்)

**கை தொலைபேசி MOBILE PHONE:** ____________________

**மின் அஞ்சல் E-MAIL:** ____________________

**விண்ணப்பப் படிவம் அனுப்பப்பட வேண்டிய முகவரி**

**THE INNER MAN – GTAC**
**7700 MARKHAM ROAD**
**P. O. BOX 3052**
**MARKHAM, ON L3S 4T1**

gtachurch.ca

gtachurch.ca

210 Silver Star Blvd., Unit 807, Scarborough, ON M1V 5J9
www.gtachurchnet.ca ☎ 416.613.2909